


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 46 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை (12.12.2024)




## கொழும்பு துறைமுக திட்டம்

# அமெரிக்க நிறுவனத்திடம் கடன் உதவி கோரிக்கையை மீளப்பெற்ற அதானி



**பாலகணேஷ் டிலுக்ஷா**

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்துக்காக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் முன்வைத்த நிதியுதவிக்கான கோரிக்கையை இந்தியாவின் அதானி குழுமம் மீளப் பெற்றுள்ளது.

அதானி குழுமத்தின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்திற்கு, அந்த குழுமத்தின் கோரிக்கைக்கு அமைய 553 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக அமெரிக்காவின்

02 →




# கடும் அழுத்தத்தில் பேராதனை பல்கலை கலைப்பீட மாணவர்கள்

## மாணவர் ஒன்றியம் பிரதி அமைச்சருக்கு மகஜர்

**கண்டி நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் பெரும் அழுத்தத்தில் உள்ளதாகத் தெரிவித்து, உயர்கல்வி பிரதி அமைச்சர் வைத்திய கலாநிதி மதுர செனரத்திற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், இது தொடர்பில் அனுப்பியுள்ள கடிதத்தில், 15 வாரங்கள் கற்க வேண்டிய தவணையை 12 வாரமாக குறைத்துள்ளமையால் விரிவுரைகள் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெறுவதாக தெரிவித்துள்ளனர்.

அதன் பின், இரவில் சூம் நிகழ்நிலை செயலியினூடாக விரிவுரைகள் நடைபெறுவதாலேயே இவ் அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை 12 வாரத்திற்கு ஏற்றவாறு பாடப்பரப்பினை குறைத்திருக்கலாம். அவ்வாறு செய்யாததால், மன அழுத்தம் உட்பட, வேறு பொதுத் துறைகளில், பாடத்திட்டப் புறச்செயல்பாடுகளில் ஈடுபட முடியாதுள்ளது. இதனைக் கவனத்திற்கொண்டு அழுத்தத்தினை குறைப்பதற்கான தீர்வு ஒன்றினை பெற்றுத்தருமாறு கோரிக்கையைக் கலைப்பீட மாணவர் சங்கத் தலைவர் பெதும் அகலங்க விடுத்துள்ளார்.

# சர்ச்சைக்கு மத்தியில் எம்.பியானார் பைசர் முஸ்தபா

**பாலகணேஷ் டிலுக்ஷா**
**கனுஷியா புஷ்பகுமார்**

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக பைசர் முஸ்தபாவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

அதில் ஒரு ஆசனத்திற்கு ரவி கருணாநாயக்க

02 →

# "போதகர் ஜெரோம் இலங்கை கத்தோலிக்க ஆயர் அல்ல"

சர்ச்சைக்குரிய மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் அல்ல என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெளிவுபடுத்தியுள்ளது.

ஜெரோம் பெர்னாண்டோ ஆயராக நியமிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் ஊடகங்களில் வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அறிக்கை ஒன்றின் ஊடாக இந்த தெளிவுபடுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

02 →

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

**முகம்மட் முக்தார்**

நாடளாவிய ரீதியில் உள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளும் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறைக்காக நாளை(13) மூடப்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது .

இவ்வாறு மூடப்படும் முஸ்லிம் பாடசாலைகள் 2024 ஆம் கல்வியாண்டின் மூன்றாம் தவணையின் இறுதிக்கட்ட

02 →

# மின் கட்டணத்தில் மாற்றம் ஏற்படுமா? தீர்மானம் ஜனவரி 17 ஆம் திகதி

**கனுஷியா புஷ்பகுமார்**



இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மின்சார கட்டண திருத்த யோசனை தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் 2025 ஜனவரி 17 ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று புதன்கிழமை (11) விடுத்துள்ள அறிவிப்பில் இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை மின்சார சபையினால் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாத காலத்திற்கு முன்வைக்கப்பட்ட மின்சார கட்டண திருத்த முன்மொழிவுக்கான பொது கலந்தாய்வு 2025 டிசம்பர் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக ஜனவரி 08ஆம் திகதி வரை எழுத்துப்பூர்வ கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், வாய்வழி கருத்து கோரல் 09 அமர்வுகள் இடம்பெறவுள்ளன. ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் மின்சாரக்

02 →

# இந்திய வீட்டுத்திட்டம் 519 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைப்பு



4000 இந்திய வீட்டுத்திட்டத்தில் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 519 பேருக்கான, காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று (11) ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய புதிய கலையரங்கில் வழங்கி வைக்கப்பட்டன.

02 →

# அரிசி

## கொழும்பு புறக்கோட்டை, மட்டக்குளி, தொட்டலங்க உட்பட பல பகுதிகளில் சுற்றி வளைப்பு நடவடிக்கை

**கனுஷியா புஷ்பகுமார்**

அரசாங்கத்தின் நிபந்தனைகளை மீறி சட்டவிரோதமான முறையில் அரிசி விற்பனையில் ஈடுபட்ட 6 கடைகளுக்கு எதிராக நேற்று (11) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் விதமாக அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் நிர்ணயித்திருந்தது. அதனை மீறி சட்டவிரோதமாக விற்பனையில் ஈடுபடும் விற்பனையாளர்கள் தொடர்பில் ஆராய நுகர்வோர் அதிகார சபை சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, நேற்று புதன்கிழமை (11) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது சட்டவிரோதமாக அரிசி

02 →

## யாழ். மாவட்டத்தில் வைத்திய எச்சரிக்கை!

# 06 பேர் உயிரிழப்பு; எலிக்காய்ச்சல் சந்தேகம்; 33 பேருக்கு நோய் அறிகுறி

**யாழ் நிருபர்**

யாழ்ப்பாண மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் நோய் பரவிவரும் நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

02 →

# குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகத்தை இன்று நெருங்கும்

**பாலகணேஷ் டிலுக்ஷா**



தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதாகவும், இன்று வியாழக் கிழமை வடமேற்கு திசையில் மேற்கு நோக்கி நகர்ந்து தமிழக கடற்கரையை நெருங்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்கரையை அண்மித்த ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பரப்புகளில் மீன்பிடித்தல் மற்றும் கடற்பயணத்தில்

02 →

# திருமலையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்



விரிவான செய்தி 2ம் பக்கம்

# சபாநாயகரின் கல்வித் தகுதி: விசாரணை கோருகிறது லிபரல் இளைஞர் இயக்கம்

**கனுஷியா புஷ்பகுமார்**

நாடாளுமன்ற சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகுதி குறித்து தற்போது சமூகத்தில் பல்வேறு விவாதங்கள் பரவி வருகின்றன.

இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனம் காத்துவரும் நிலையில் எதிர்வரும் நாட்களில் இது தொடர்பில் பதிலளிப்பதாக கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், லிபரல் இளைஞர் இயக்கம் அமைப்பு அறிவிப்பொன்றை விடுத்துள்ளது. குறித்த விடயங்கள்

02 →

# திருமலையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

**மூதூர் நிருபர், கியாஸ் சாபி, எம்.என்.எம். புஹாரி**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பேரணி நிகழ்வு நேற்று (11) புதன்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது.

அகம் மனிதாபிமான வள நிலையத்தின் அனுசரணையில் கிழக்கு மாகாண சிவில் வலையமைப்பு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தது.

வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, உண்மை மற்றும் பொறுப்பு கூறல், கூட்டுப்படுகொலைகளுக்கான நீதி, பயங்கரவாததடைச்சட்டம்நீக்கம், அரசியல் கைதிகளின் விடுதலை, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடு வழங்கல், மீனவர்களுக்கான நிவாரணம் வழங்கல், பன்முகப்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்களுக்கான தீர்வு, 76 வருட தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வு போன்ற விடயங்களை உள்ளடக்கிய கோசங்களை எழுப்பி கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை சிவன் கோவிலடியில் இருந்து கவனயீர்ப்பு பேரணி ஆரம்பமாகி குளக்கோட்டன் மண்டபத்தை சென்றடைந்தது.பேரணியில் கலந்து கொண்டோர் சுலோகங்களையும் ஏந்தியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பினர்.

குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வின் இறுதியில் , குறித்த விடையங்களை உள்ளடக்கிய மகஜர் ஒன்று சனாதிபதியிடம் கையளிப்பதற்காக சிவில் அமைப்புகளினால் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்: வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் சட்டத்தில் திருத்தம்

**பாலகணேஷ் டிலுக்‌ஷா**

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டவரைஞர் திணைக்களத்தால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர்,பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம்

எடுக்கப்பட்டது. அதற்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த திருத்தங்கள் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்ததன் பின்னர், எதிர்வரும் வாரங்களில்

நாடாமன்றத்திலும் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கடிதம்

**(கனுஷியா புஷ்பகுமார்)**

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குதல் உள்ளிட்ட நாட்டின் அரசியலமைப்பு மற்றும் நீதித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை விளக்கி சட்டத்தரணிகள் சங்கம், புதிய அமைச்சரவை உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்குதல், நிகழ்நிலை காப்புச் சட்டத்தை இரத்து செய்தல் மற்றும் ஆட்சிமுறை தொடர்பில் தற்போது அவதானிக்கப்படும் சிக்கல்கள் குறித்து அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அமைப்பின் சுயாட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், அரச பல்கலைக்கழகங்களை சுதந்திரமாகவும் வலுவாகவும் மாற்றும் சீர்திருத்தங்களைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டவாக்க சபையை வலியுறுத்துகிறது.

ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரத்தினம், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், பேராசிரியர் தீபிகா உடகம, பேராசிரியர் கமினா குணரத்ன, சட்டத்தரணி கே.டபள்யூ ஜனரஞ்சன, சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரோரா, சட்டத்தரணி அர்மிசா டீகல், சட்டத்தரணி தர்ஸன குருப்பு ஆகியோர் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### அமெரிக்க நிறுவனத்திடம்...

சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு அறிவித்திருந்தது.

இந்தநிலையில், குறித்த கோரிக்கையை அதானி குழுமம் மீளப் பெற்றுள்ளது. அதற்கமைய, கொழும்பு மேற்கு முனையத் திட்டத்துக்காக உள் நிதி திரட்டல்கள் மூலம் நிதியளிப்பதாக அதானி குழுமம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கொழும்பு துறைமுக மேற்கு முனையத் திட்டம் சிறப்பாக முன்னேறி வருவதாகவும், 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய பில்லியனர் கௌதம் அதானியின் கட்டுப்பாட்டில் உள்ள அதானி குழுமம், துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தில் 51மூ பங்குகளை வைத்துள்ளது, இது சீனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் கோ லிமிடெட் மூலம் நடத்தப்படும் முனையத்தையும் கொண்டுள்ளது.

இலங்கையின் கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், முனையத்தின் 34 வீத உரிமையைக் கொண்டுள்ளது, மீதமுள்ளவை அரசாங்கத்தால் நடத்தப்படும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமானது.

இதேவேளை, இலங்கையில் அதானி குழுமத்தின் காற்றாலை மின்சாரத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவையில் விபரங்களை சமர்ப்பிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த குழு காற்றாலை மின் திட்டங்களை பல துறைகள் மூலம் ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மன்னார் மற்றும் பூநகரியில் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டங்கள் மூலம் மொத்தம் 484 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டங்களில் அதானி குழுமம் ஏற்கனவே சில முதலீடுகளை செய்துள்ளது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஆய்வு செய்த பின்னர், இது குறித்து அமைச்சரவை முடிவெடுக்கும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### இந்திய வீட்டுத்திட்டம்...

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய அதிகார சபை முன்னெடுத்திருந்தது.

இந்த காணி உறுதி வழங்கும் நிகழ்வில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி, கண்டிக்கான இந்திய துணைத்தூதுவர் சரண்யா, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டீ.பங்கமுவ, அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### சர்ச்சைக்கு மத்தியில்...

நியமிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக் கப்பட்ட சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயர் தொடர்பில் கட்சிக்குள் நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பைசர் முஸ்தபாவின் பெயரை வழங்குவது தொடர்பில் தம்முடன் கலந்துரையாடவில்லை என புதிய ஜனநாயக முன்னணியுடன் கூட்டணியமைத்துள்ள கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை நியமிப்பதற்கு அனைத்து கட்சிகளும் இணக்கப்பாடு தெரிவித்திருந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், புதிய ஜனநாயக முன்னணியின் கூட்டணி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூலம் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவின் பெயரும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி, சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

அதில் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்திற்காக, ரவீ கருணாநாயக்கவை நியமிக்க கட்சியின் செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து மற்றைய ஆசனத்தை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது.

### போதகர் ஜெரோம்...

கத்தோலிக்க திருச்சபையில் உத்தியோகபூர்வ அப்போஸ்தலிக்க வாரிசு அல்லாத ஜெரோம் பெர்னாண்டோ கத்தோலிக்க திருச்சபையின் பிஷப் அல்ல என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது போன்ற தகவல்களை நம்பி பொது மக்கள் ஏமாந்துவிட வேண்டாம் என்றும் சபை வலியுறுத்தியுள்ளது.

### முஸ்லிம் பாடசாலைகளுக்கு...

கல்வி நடவடிக்கைகளுக்காக 2025 ஜனவரி 02 ம் திகதி திறக்கப்படுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான பரீட்சை மண்டபங்களுக்காக கடந்த நவம்பர் மாதம் 22 ம் திகதியுடன் மூடப்பட்ட முஸ்லிம் பாடசாலைகளும் மூன்றாம் தவணை இறுதிக் கல்வி நடவடிக்கைக்காக ஜனவரி 02 ம் திகதி மீண்டும் திறக்கப்படுமென கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட விடுமுறைக்காக மூடப்பட்ட சகல தமிழ், சிங்கள பாடசாலைகளும் ஜனவரி 02 ம்திகதி மூன்றாம் தவணையின் இறுதிக்கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மின் கட்டணத்தில்...

கட்டணங்கள் தொடர்பான பொதுமக்களின் பொது ஆலோசனைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 6ஆம் தளம், இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம், கொழும்பு 3 என்ற முகவரிக்கு , info@pucsl.gov.lk அல்லது www.facebook com.pucsl என்ற முகநூல் பக்கத்திற்கு அனுப்ப முடியும்.

இல்லையெனில், 0764271030 என்ற எண்ணுக்கு வாட்ஸ்அப் ஊடாக கருத்துக்களையும் அனுப்ப முடியும் என ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

வாய்மூலமான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கொழும்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் மக்களின் வசதிக்காக இம்முறை மாகாண மட்டத்தில் அது மேற்கொள்ளப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### யாழ். மாவட்டத்தில் வைத்தி...

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளநிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது. இக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்றனர். இறந்தவர்கள் எல்லா இறப்புக்களும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சலானது மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந்நோய்க்கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ளநீருடன் தொடுகை ஏற்படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்ட தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக்கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

தற்போதைய காலப்பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

வயல்கள் சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ள வேண்டும். கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.

வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.

தற்போதைய காலப்பகுதியில் வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

தற்போது நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் – என்றார்.

### அரிசி ...

விற்பனையில் ஈடுபட்ட 6 கடைகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்புகள் கொழும்பு கோட்டை, 5ஆம் குறுக்குத் தெரு, 4ஆம் குறுக்குத் தெரு, தொட்டலங்க, மட்டக்குளிய ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தல், அரிசி கையிருப்பை மறைத்து வைத்தல், அரிசி ஆலைகளிலிருந்து கொண்டுவரப்பட்ட அரிசியின் விலையை மாற்றி அதிக விலையைக் காட்சிப்படுத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளில் குறித்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த 50 கடைகளுக்கு எதிராக நேற்று முன்தினம் (10) நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசி விற்பனை செய்பவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் துரிதப்படுத்தப்படும் எனவும் சட்டவிரோத விற்பனையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

### குறைந்த காற்றழுத்த

ஈடுபடுவதை தவிர்க்குமாறும் திணைக்களம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் மன்னார் முதல் புத்தளம் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில்காற்றின்வேகமானதுவடகிழக்கிலிருந்து மேற்கு-மேற்கு திசையில் மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன் திருகோணமலை முதல் காங்கசந்துறை வரையான புத்தளம் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது 50-60 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பு காணப்படுவதுடன் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் சந்தர்ப்பங்களில் இந்தக் கடற்பரப்புகளில் பலத்த காற்று வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாவதுடன் சில இடங்களில் 100 மில்லி மீற்றரிலும் அதிகரித்த மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பொது மக்கள் 117 என்ற எண்ணிற்கு அழைப்பை ஏற்படுத்துவதனூடாக அனர்த்த நிலைமைகள் தொடர்பில் அறிவிக்க முடியும்.

இதேவேளை,தமிழகத்தின் நாகை மாவட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப் படகு மீனவர்கள் நேற்று புதன்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக உருமாறி உள்ளது. இது மேலும் வலுவடைந்து டெல்டா கரையை நோக்கி நகரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களில் பலத்த மழை வீழ்ச்சி பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### சபாநாயகரின்..

தொடர்பில் மூன்று முக்கிய யோசனைகளை அவர்கள் அறிவிப்பில் முன்வைத்துள்ளனர்.அந்த மூன்று யோசனைகளுக்கும் அரசாங்கத்தின் பதிலை விரைவில் எதிர்பார்ப்பதாகவும்அவர்கள்மேலும்கேட்டுக்கொள்கின்றனர்.

குறித்த அறிவிப்பில்,

சபாநாயகர் அசோக ரன்வல மற்றும் ஆளும் கட்சி தேர்தலுக்கு முன்னரும், நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போதும் முன்வைக்கும் கல்வித் தகுதியின் துல்லியம் குறித்த சந்தேகம் பொது மக்களிடையே தீவிர விவாதத்திற்கு அடிப்படையாகி உள்ளது. அரசியல்வாதிகள் தங்கள் வாக்காளர்களிடம் கூறிய தகவல் உண்மையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சபாநாயகர் பதவி வகிப்பதற்கு கல்வித் தகுதிகள் கட்டாயமில்லை என்றாலும், தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் நம்பகத்தன்மையை அதிகரிக்க இந்தக் கல்வி மற்றும் தொழில் தகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய தகுதிகள் பற்றிய தவறான தகவல்களை அளித்து பொதுமக்களை தவறாக வழிநடத்துவது பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் ஜனநாயக செயல்முறையின் நல்வாழ்வை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

2022 இல் காலி முகத்திடல் போராட்டத்திற்குப் பிறகு மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அரசாங்கம் நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒருமைப்பாடு என்ற சிறப்பு அளவுகோல்களின்படி செயல்படும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால், அரசின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கை குறையும்.

இந்தச் சூழலில், லிபரல் இளைஞர் இயக்கம் கீழ்க்கண்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை கடுமையாக வலியுறுத்துகிறது.

மூ சபாநாயகர் அசோக ரன்வல அவர்களின் கல்வித் தகுதியின் உண்மைத் தன்மை குறித்து உடனடி மற்றும் நியாயமான விசாரணையை நடத்துதல்.

மூ விசாரணை முடிவுகள் பற்றிய தெளிவான மற்றும் வெளிப்படையான அறிக்கையை பொதுமக்களுக்கு வழங்கவும்.

மூ விசாரணை முடிவுகளின்படி, விதிமீறல் இருந்தால், சபாநாயகர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தின் பதில் இது தொடர்பில் வெளிப்படையான மற்றும் உயர்மட்ட அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான சமிக்ஞையாக அமையும்.

மேலும், இவ்விடயத்தில் உரிய முறையில் பதிலளிக்கத் தவறினால்,மக்களுக்கு அவநம்பிக்கையை அதிகரிக்கச் செய்து, நல்லாட்சிக்கான கருத்துருவுக்கு இடையூறாக அமையும்.

லிபரல்இளைஞர்இயக்கம்என்றவகையில், இலங்கையின் அரசியல் அமைப்பில் ஜனநாயக விழுமியங்கள், நிர்வாகத்தில் குடிமக்களின் பங்கேற்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

எந்தவொரு கேள்விக்குரிய விடயத்திலும் எங்கள் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து நியாயமான விளக்கத்தையும் உண்மையையும் கோரும் குடிமக்களுடன் நாங்கள் நிற்கிறோம்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற இணையத்தளத்தில் தனது பெயருக்கு முன்னால் எழுதப்பட்டிருந்த "கலாநிதி" என்ற பட்டம் எவ்வாறு நீக்கப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என சபாநாயகர் அசோக ரன்வல தெரிவித்துள்ளார்.



இலங்கை மற்றும் ஈராக் குடியரசுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஈராக் தூதரகத்தினால் கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் (10) ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாக கலந்து கொண்டார். ஈராக் தூதுவர் Anmar A. A. Al-Emin இதற்கான அழைப்பை விடுத்திருந்தார்.

# பெருந்தோட்டப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு அமைக்க அமைச்சு தீர்மானிக்கவில்லை

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்

**(க.கிஷாந்தன்)**

“பெருந்தோட்டப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகளை அமைப்பது தொடர்பில் எந்தவொரு முடிவையும் அமைச்சு எடுக்கவில்லை.” – என்று பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற, 519 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“பெருந்தோட்டப் பகுதிகளில் தொடர்மாடி குடியிருப்புகளை அமைப்பதற்குரிய பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக எமது அமைச்சின் செயலாளர் கூறினார் எனவும், மாடி வீடுகள் அமைக்கப்படவுள்ளன எனவும் சமூகவலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

தேசிய மக்கள் சக்தி மீது சேறு பூசுவதற்காக இன்று பல குழுக்களும், தோல்வி அடைந்த கட்சிகளும் செயற்பட்டு வருகின்றன. சொல்லாததை சொன்னதாகவும், செய்யாததை செய்ததாகவும் கருத்துகளை பரப்பிவருகின்றனர்.



அவ்வாறான எந்தவொரு முடிவையும் அமைச்சு எடுக்கவில்லை. எனவே, வதந்திகளை பரப்பி மக்களை அச்சப்படுத்தாமல், உண்மையை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி இன்னும் ஒரு வருடம்தான் இருக்கும் என அரசியல் ரீதியில் வங்கரோத்தடைந்தவர்கள் கூறிவருகின்றனர். மக்கள் எந்த நோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வரை எமது ஆட்சியை கவிழ்க்க முடியாது என தெரிவித்த அவர்,தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் மிக விரைவில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம்
27ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** இன்று உங்களுக்குத் தெரிந்தவர்கள் மூலமாக புதிய வருமான வாய்ப்புகள் அமையும்.

**ரிஷபம்** இந்த நாள் உங்கள் திருமண வாழ்வில் தனிச்சிறப்பான நாளாக இருக்கும்.

**மிதுனம்** உங்களின் வேகமான செயல்பாட்டால் உத்வேகம் அதிகரிக்கும்.

**கடகம்** உங்கள் காதல் துணை இன்று உங்களுக்கு அருமையான பரிசினை அளிப்பார்.

**சிம்மம்** உங்கள் திருமண வாழ்க்கையில் இன்று மிக சிறந்த நாள்.

**கன்னி** இன்று நீங்கள் பணம் சம்பாதிக்க பல வாய்ப்புகள் இருக்கும்.

**துலாம்** வேலையில் இன்று நீங்கள் பாராட்டுக்களை இன்று பெறலாம்.

**விருட்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ பெரியவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

**தனுசு** இன்று உங்கள் எல்லோருக்கும் மிகவும் சுறுசுறுப்பான மற்றும் அதிக சோஷியலான நாள்.

**மகரம்** இன்று நீங்கள் உங்கள் தாயின் தரப்பிலிருந்து பயனடைய வாய்ப்புள்ளது.

**கும்பம்** இன்று உற்சாகமும் ஆற்றலும் நிறைந்து காணப்படும்.

**மீனம்** இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் நிறைந்து காணப்படும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** துவாதசி திதி இரவு 08:37 PM அதன் பிறகு திரயோதசி திதி.
**நட்சத்திரம்:** அஷ்வினி நட்சத்திரம் காலை 08:19 AM அதன் பிறகு பரணி நட்சத்திரம்.
**யோகம்:** அமிர்த-சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** அஸ்தம்.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** மதியம் 01:30 PM முதல் 03:00 PM வரை,
**குளிகை:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,
**எமகண்டம்:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,

# அமெரிக்க தூதுவருடன் ஹக்கீம் சந்திப்பு



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே. சங் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பொன்று செவ்வாய்க்கிழமை(10) கண்டியில் இடம்பெற்றது.இதன் போது சமகால விவகாரங்கள் குறித்து பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# உணவகங்களில் திடீர் பரிசோதனை: பாவனைக்குதவாத உணவுகள் அழிப்பு



**(நூருல்ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது பழுதடைந்த உணவுகள் மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள், உணவுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே .மதன் தலைமையிலான குழுவினர் சாய்ந்தமருது பிரதேச உணவகங்களில் திடீர் சோதனை செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் உணவகங்கள், வெதுப்பகங்கள், மரக்கறி, மீன் விற்பனை நிலையங்கள், பலசரக்கு கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டன. இதன் போது பழுதடைந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதுடன் சில நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் எதிர்வரும் காலங்களில் உணவு சுகாதாரம் மீதான கண்காணிப்பு தொடரும் என்பதுடன் இறுக்கமான சட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மு.பொ. நினைவுப்பகிர்வு

கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை (13) வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மூத்த எழுத்தாளர், கவிஞர் அமரர் மு. பொன்னம்பலம் (மு.பொ) நினைவுப்பகிர்வு நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நினைவுப்பகிர்வில் முனைவர் செல்வி திருச்சந்திரன், பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் வ. மகேஸ்வரன், உரை பெயர்ப்பாளர் எஸ். சிவகுருநாதன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், மெய்யியல் ஆசான் தா. இராஜரட்னம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்

# இ.தொ.கா முழுமையாக மறுசீரமைக்கப்படும்

## பிரதித் தலைவர் கணபதி கனகராஜ்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முழுமையாக மறுசீரமைக்கப்படவுள்ளதாகவும், இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், மறுசீரமைப்பு நடவடிக்கை ஜனவரியில் இடம்பெறும் என இ.தொ.காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்தார். நேற்று (11) மாலை கொட்டகலை சீ.எல். எப் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இ.தொ. காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார். கொட்டகலையில் அமைந்துள்ள சீ.எல். எப் கேட்போர் கூடத்தில் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தவிசாளர் எம்.ராமேஷ்வரன் ஆகியோர் தலைமையில் தேசிய சபை நேற்று (11) கூடியது.இந்த தேசிய சபைக் கூட்டம் முடிவடைந்த பின்பே தேசிய சபையில் எடுக்கப்பட்ட மேற்படி முடிவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் இதனை அறிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

‘கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா ஐந்து சபைகளைக் கைப்பற்றியது.இம்முறையும் உள்ளூராட்சிசபைத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு வியூகம் வகுக்கப்படுகின்றது. காங்கிரஸின் தனித்துவமான சேவல் சின்னத்தில் போட்டியிடுவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது. கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை. அது பற்றியும் பரிசீலிக்கப்படுகின்றது. இ.தொ.காவின் மறுசீரமைப்பு நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டும் என்ற தீர்மானம் தேசிய சபையில் எடுக்கப்பட்டது. இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் அதற்குரிய நடவடிக்கை இடம்பெறும். நியமிக்கப்பட்ட குழு தனது பரிந்துரைகளை தேசிய சபைக்கு முன்வைக்கும். அதற்கமைய மறுசீரமைப்பு இடம்பெறும். காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை தற்போதைய அரசாங்கம் முன்னெடுப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். இப்படியான அரசின் நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு

# சபாநாயகர் ஜப்பானில் கல்வி கற்கவில்லை

## நாடாளுமன்றை அவமதித்ததாக ஐ.தே.க. குற்றச்சாட்டு

**(கனுஷியா புஷ்பகுமார்)**

சபாநாயகர் அசோக ரன்வல தனது மாணவராக இருந்ததில்லை என ஜப்பானின் வசேதா பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும், போலியான கலாநிதி பட்டத்தைக் காட்டுவது நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சபாநாயகர் அசோக ரன்வல, ஜப்பானில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அசோக ரன்வெல, ஜப்பானில் உள்ள பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் படித்தவரா என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு அந்தப் பல்கலைக்கழகத்திடம் தகவல்களைக் கோரியுள்ளது.

இந்நிலையில், அசோக ரன்வல என்னும் நபர் தமது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கவில்லை என அப்பல்கலைக்கழகம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள குறிப்பிட்டுள்ளார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் 22ஆவது சபாநாயகர் நாட்டின் உயரிய பதவியான சபாநாயகர் பதவியை அவதூறு செய்துள்ளதாக தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரால் வெவ்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# திருமலை ஊடகவியலாளர்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

**(எஸ்.கீதபொன்கலன்)**

வடக்கு,கிழக்கு மற்றும் நாடு முழுவதிலும் கடந்த காலங்களில் கொலையுண்ட, காணாமலாக்கப்பட்ட,அங்கவீனமுற்ற அனைத்து ஊடகவியலாளர்களுக்கும், இன, மொழி, சமய,பால் வேறுபாடுகள் எதனையும் கருத்தில் கொள்ளாது நீதி கிடைக்கவும்,குற்றம் புரிந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனைகள் வழங்கப்படவும் வேண்டுமென கோரி, பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

கோரிக்கைக்கை கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்பிப்பதற்காக,வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவிடம் நேற்று(11) திருகோணமலை கந்தலாவ ஐக்கிய ஊடக மன்ற பிரதான நிர்வாகிகளால் கையளிக்கப்பட்டது.

திருகோணமலையில் உள்ள பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து இக் கோரிக்கை கடிதத்தை ஊடக மன்றத்தின் தலைவைர் அமதோரு அமரஜீவ,பொருளாளர் எஸ். கீதபொன்கலன்,அமைப்பாளர் கிஹாஸ் ஷாபி,நிர்வாக குழு உறுப்பினர் யூசூப் ஆகியோர் கையளித்தனர்.



2005 ம் ஆண்டில் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் திருகோணமலையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் 116 பாதுகாப்பு அதிகாரிகள் நீக்கம்

## மொட்டுக்கட்சி விசனம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்பாதுகாப்புப் பிரிவில் இருந்து 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவில் பிரபுக்கள் பாதுகாப்பில் அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் அனைவரும் நீக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கொள்கை பரப்பு மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவுக்கு பொலிஸ் மனிதவள முகாமையாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நேற்று முன்தினம் (10) கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் சித்தாந்தம் கொண்டவர்கள் இன்னும் இருக்கும் நிலையில், அந்த பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது மிகவும் பாரதூரமான செயல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## பட்டங்கள் படும் பாடு

"மன்னர்க்குத்தன்தேச மல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" பெரும் செல்வந்தனாக விளங்கும் மன்னனை விடவும் நிறையக் கற்ற கல்வியாளன் அதிகம் போற்றப்படுகிறான். மன்னனுக்கு அவன் நாட்டில் மட்டும்தான் மதிப்பு. ஆனால், கற்றவர்க்கோ சென்ற இடத்திலெல்லாம் மதிப்பு என்பது ஔவையின் மூதுரை.

கல்வித் தகுதி தான் ஒருவனை உயர்த்தி நிற்க வைக்கிறது. அதுதான் நாட்டிற்கும், வீட்டிற்கும் ஒரு நல்ல பிரஜையை உருவாக்குகிறது.

அதனால்தான் பெற்றோர்கள் எந்தளவு துயரத்திலும் பிள்ளைகளை கற்றலில் சிறந்த பட்டதாரிகளாக்க பாடுபடுகின்றனர்.

இந்தக் கல்வித் தகுதி என்பது அந்தக் கல்வியை முறையாக கற்றுத் தேர்ந்த ஒருவருக்கு மட்டுமே உரிய ஒரு பாதுகாப்புக் கவசம் ஆகும்.

அதனை தவறான வழிகளில் பயன்படுத்துபவர்கள் பல பேர் உள்ளனர். தத்தமது நற்பெயருக்காகவும், தொழில்வாய்ப்புகளுக்காகவும் கல்வித் தகைமைகள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன.

எனினும், எதிர்கால சந்ததிக்கு சிறந்த முன்னுதாரணமாக இருக்க வேண்டியவர்கள் பலர் தனது கல்வித் தகைமைகைளில் பல குழப்பங்களை செய்துள்ளமை முறையற்ற ஒரு விடயமாகும்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகர் அசோக ரன்வலவின் கல்வித் தகுதி தொடர்பான விமர்சனங்கள் குறித்த சில தினங்களாகவே சர்ச்சையை உருவாக்கியுள்ளன.

அரச சபை என அடையாளப்படுத்தப்படும் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பதவிவழி அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு.

பொதுவாக அரசியல்வாதிகளாக தெரிவுசெய்யப்படுபவர்கள் இந்த அளவுக்கு கல்வித் தகைமையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது எங்கும் எழுதப்பட்ட நியதியாக இல்லை.

அரசியல்வாதிகளுக்கு கல்வித் தகைமையிருந்தால் அது வரவேற்கத்தக்கது.

இலங்கை அரசியலில் ஜனாதிபதி வரலாற்றில் கல்வியில் தேர்ந்தவர்களாக ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கூறலாம்.

ஏனையவர்கள் கல்வியில் சிறந்தவர்களாக இல்லாவிட்டாலும் சிறந்த தெளிவும், அரசியல் ஞானம் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர்.

எனவே, அரசியலில் ஈடுபட கல்வித் தகைமை என்பது அத்தியாவசியம் கிடையாது எனினும் போலியான கல்வித் தகைமைகளை முன்வைப்பது என்பது நாடாளுமன்றத்தை அவமதிக்கும் ஒரு செயலாக பார்க்கப்படுகிறது.

முதலில் கூறியது போல நாடாளுமன்றத்தில் முதலாவது அதிகாரம் ஜனாதிபதிக்கும், இரண்டாவது அதிகாரம் பிரதமருக்கும், மூன்றாவது பதவிவழி அதிகாரம் சபாநாயகருக்கே உண்டு.

அத்தகைய மதிக்கத்தக்க கதிரையில் அமர்ந்துக்கொண்டு தனது கல்வித் தகைமைகளை போலியாகக் கூறியிருப்பது தலைகுனிய வேண்டிய ஒரு செயலாகும்.

அதுமாத்திரமன்றி, கல்வித் தகைமை போலியானது என சர்ச்சைகள் ஆரம்பித்தவுடன் நாடாளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து அவரது கல்வித் தகைமைகள் நீக்கப்பட்டமை தற்போது மேலும் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

இந்த சர்ச்சைகளுக்கு தீர்வாக சபாநாயகர் அசோக ரன்வல பதவி விலக வேண்டும் என பலரும் அழுத்தம் வழங்கி வரும் நிலையில் சமூக ஊடக ஆர்வலர்களும் இதற்கு எதிராக குரல் எழுப்பி வருகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தின் குறைகளை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளும், பழைய அரசியல் தலைமைகளும் இந்த விடயத்தில் குளிர் காய ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், தனது கல்வித் தகைமை தொடர்பில் எழுந்துள்ள கேள்விகளுக்கு கூடிய விரைவில் பதிலளிப்பேன் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்தார்.

சபாநாயகரின் பதில் எதுவாக இருந்தாலும் அநுர அரசாங்கம் அதற்கு சரியான சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம், அது பதவி விலகலோ, பகிரங்க மன்னிப்போ எதுவாக இருந்தாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால் அதனை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதுவே மறுமலர்ச்சி அரசாங்கத்திற்கும் அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கும் நிரூபனமாக அமையும்.

எனினும், இந்த சர்ச்சையை தமது அரசியல் இலாபங்களுக்காக பல அரசியல்வாதிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

இதேவேளை, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த விடயத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைகளை வழங்கியுள்ளார்.

இதனை அரசியலாக்குவது சிறந்தது அல்ல. சபாநாயகரின் கல்வித் தகைமைகள் போலியாக இருந்தாலும் அதற்கு உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே சிறந்த தீர்வாக இருக்கும்.

அதைத்தவிர, இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி அதில் குளிர்காயும் செயற்பாடுகளை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உண்மையிலேயே, இதனை தட்டிக்கேட்கும் பழைய அரசியல் வாதிகள் கடந்த நாடாளுமன்றங்களில் அரங்கேறிய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஏன் இதுவரையில் வாய்திறக்கவில்லை.

கல்வித்தகைமைகளை மறைப்பது நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயல் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது எனின், சபாநாயகரின் கதிரையை உடைப்பது தவறு என எந்தக் கட்சியும் இதுவரை சுட்டிக்காட்டவில்லை.

ஆக, கல்வித் தகைமையை சர்ச்சைக்குள்ளாக்கும் பழைய அரசியல் தலைமைகள் கடந்த நாடாளுமன்ற அமர்வுகளில் இடம்பெற்ற வன்முறைகளுக்கும் குரல் கொடுக்க வேண்டும்.

ஏனையவரின் அரசியல் சிக்கல்களை சுய அரசியல் இலாபங்க ளுக்காக அரசியலாக்க வேண்டாம் என்பது கோரிக்கை!

# மட்டு, திருமலை, அம்பாறை மாவட்ட சிவில் வலையமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர்

# பாதிக்கப்பட்டோருக்கு உரிமை, நீதியை உறுதிப்படுத்துங்கள்

### கௌரவ ஜனாதிபதியின் கவனத்திற்கு;

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த தமிழ் சிங்கள முஸ்லிம் ஆகிய மூவின மக்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், விவசாயிகள், மீனவர்கள், பெண்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் அடங்கலாக பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டு வருகின்ற நாங்கள் 11-12- 2024 அன்று திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் ஒன்று கூடி எமது ஏகோபித்த கோரிக்கைகளை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூக ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கருமமொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2006 ல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

கடந்த 1987இல் மேற்கொள்ளப் இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமான 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு 37 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்தக் கால இடைவெளியில்,

- இலங்கையில் அதிகமாக தமிழ் மக்களும் முஸ்லிம் சிங்கள மக்களும் கொல்லப்பட்டனர் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- தொடர்இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர்.
- போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்கள் உட்பட அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன.
- பயங்கரவாதத் தடைச்சட்டதின் மூலம் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.
- ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்
- இராணுவமயமாக்கல் இடம்பெற்றதுடன் திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்புக்களும் சிங்கள குடியேற்றங்களும் அதிகரிக்கப்பட்டன.

மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்டவர்களும் எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பிரச்சினைகளுக்குள்ளாக்கப்பட்ட நாங்கள் எமது பாதிப்புக்களுக்கு நீதி கோரியும் அரசியல் தீர்வு வேண்டியும் பல ஆண்டு காலமாக போராடி வருகின்றோம்.

ஆனால் இலங்கை அரசாங்கமானது பாதிக்கப்பட்ட எங்களுக்கான நீதியையோ அரசியல் தீர்வையோ வழங்காமல் இருப்பதுடன், பொறுப்புக் கூறலில் இருந்து விடுபட்டே நிற்கின்றது.

மேலே கூறப்பட்ட பல இழப்புக்களை எதிர்கொண்ட எங்களுக்கு இற்றைவரை எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் இலங்கையில் முன்னைய ஆண்டுகளில் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை என்பதனையும் இந்த நாளில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

எனவே எம்மால் கீழ்குறிப்பிடப்படும் கோரிக்கைகளுக்கு தாங்கள் கரிசிணை செலுத்தி தீர்வினை வழங்குவதன் மூலம், நாம் இலங்கையர்கள் என்ற உண்மையான எண்ணத்தினை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும் என்பதனை கூறிக்கொண்டு எமது வேண்டுதல்களை தங்களுக்கு தெரிவித்து நிற்கின்றோம்.

எமது வேண்டுதல்கள்!

1. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள அனைத்து வகையான நில ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக நிறுத்துவதுடன், சுவிகரிக்கப்பட்ட மக்களின் காணிகளை உடன் மீள வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.
2. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த விரைவாக நடவடிக்கை எடுங்கள்.

> நாம் இலங்கையர்கள் என்ற உண்மையான எண்ணத்தினை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கொண்டு வர வேண்டும் என்பதனை கூறிக்கொண்டு எமது வேண்டுதல்களை தங்களுக்கு தெரிவித்து நிற்கின்றோம்.

கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் கூட்டுப்படுகொலைகளுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வழிவகை செய்யுங்கள்.

4. PTA ஐ ரத்து செய்ய நடவடிக்கை எடுங்கள்.
5. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும், நபர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுகின்றோம்.
6. புதிய அரசியல் அமைப்பில் வடக்கு கிழக்கில் உள்ள சிறுபான்மை இனத்தவர்களின் கருத்துக்களையும் அதிகமாகவும் காத்திரமான முறையிலும் உள்ளீர்த்து ஜனநாயக வழி அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள உதவுங்கள்.
7. ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கில் மீளப்பெறமுடியாத சமஸ்டி முறையிலான அரசியல் அதிகார பகிர்வை வழங்குங்கள்.
8. இலங்கையில்வடக்குகிழக்குமாகாணங்களில் இன, மதங்களைத்தாண்டி யுத்தத்தால் உடல் அவயங்களை இழந்தோர் மற்றும் செல் , சன்னத்துண்டுகளோடு வாழ்பவர்களுக்கான சுகாதார , மருத்துவ, உளநல மற்றும் பொருளாதார சமூகமயப்படுத்தலை உறுதிபடுத்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுங்கள்.
9. மத மற்றும் வழிபாட்டு சுதந்திரத்தனை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுங்கள்
10. எமது நாட்டில் குறிப்பாக மூவின மக்களும் வாழுகின்ற எமது கிழக்கு மாகாணத்தில் நல்லிணக்கத்தையும் இனங்களுக்கு இடையிலான நல்லுறவையும் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டும் அவ்வாறாதொரு சூழ்நிலையில்தான் நிலையான நல்லிணக்கமும் சமாதானமும் மலரும் என நம்புகின்றோம்.
11. இலங்கையில் இடம்பெறுகின்ற பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கான சட்டங்களை விரிவுபடுத்துவதுடன், சட்டங்களில் சீர் திருத்தங்களை உடன் மேற்கொண்டுதவுமாறும் தங்களை கேட்டுக் கொள்கின்றோம்.
   அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாராபட்சங்களையும் இல்லாது ஒழிக்கும் (சீடோ) சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாக இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்காக புதியதொரு சட்ட மூலத்தை உருவாக்குமாறும் தங்களை வினயமாக வேண்டி நிற்கின்றோம்.
12. இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், பாதிப்பிற்கான நிவாரணத்தினை துரிதமாக வழங்க ஆவண செய்யுங்கள்.
13. சட்ட விரோதமான மீன்பிடித் தொழிலை உடன் நிறுத்துவதுடன், வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளை தடுப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கவும் கோருகின்றோம்
14. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைசார் சமவாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமை சார் விடயங்களில் அதிக அக்கறை செலுத்துவதுடன், குறிப்பாக இலங்கை அரசியல் யாப்பின் 03 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் பொறிமுறைகளையும் வலுப்ப டுத்த நடவடிக்கை எடுப்பதுடன், அனைவரும் அடிப்படை உரிமைகளை சமமான முறையில் அனுபவிப்பதனை உறுதிப்படுத் தவும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம். ■



# யாழ்.வைத்தியசாலைக்கு அர்ச்சுனா எம்.பி வந்தால் பொலிஸில் ஒப்படைக்கப்படுவார்

## பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

**பு.கஜிந்தன்**

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க வருவாரெனின், வாசலிலேயே வைத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்று யாழ்ப்பாணம் போதானா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகைத் தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தான் தற்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும், தன்னை "சேர்" என்று அழைக்குமாறும் கூறி எம்மோடு முரண்பட்டார்.

அவரை சேர் என்று அழைக்க முடியாது என்று பதிலளித்ததற்கு, என்னை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அகற்றுவேன் எனவும், நாடாளுமன்றத்திற்கு அழைத்து கேள்வி கேட்பேன் என்றும் கூறினார். அத்துடன் என்னை வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லுமாறு கூறினார்.

அத்தோடு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் உள்நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பம் விளைவிப்பதற்கு இடமளிக்க முடியாது.

மீண்டும் ஒருமுறை அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு குழப்பம் விளைவிக்க முற்படுவராயின் அவர் வாசலிலேயே வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என குறிப்பிட்டுள்ளார்.



# வவுனியாவில் யானை தாக்கி கிராம சேவகர் பலி

**கி.வசந்தன்**



வவுனியா, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கி முன்னாள் கிராம சேவையாளர் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பூவரசன்குளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வேலங்குளம் பகுதியில் வசிக்கும் இவர் நேற்று முன்தினம் (10) மாலை தனது மாட்டை வீடு நோக்கி கொண்டு சென்ற போது வேலங்குளம் இராணுவ முகாமுக்கு அண்மையில் வீதிக்கு வந்த யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் முன்னாள் கிராம அலுவலரான மோகனகாந்தி என்பவரே மரணமடைந்தவராவார்.

குறித்த யானை சுமார் மூன்று மணிநேரத்திற்கு மேலாக குறித்த பகுதியில் நின்று அட்டகாசம் புரிந்துள்ளது.

இதனால் அவ் வீதி வழியாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரித்தானிய முதன்மைச் செயலாளர் யாழ் அரசாங்க அதிபர் சந்திப்பு

**பு.கஜிந்தன்**



பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி, நேற்று (11) காலை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகளுக்கு தேவையான வைத்திய உபகரணங்களின் தேவைப்பாடுகள் உள்ளதாகவும் அதற்கான உதவிகளை வழங்குமாறும் அரசாங்க அதிபர் கோரிக்கையினை முன்வைத்தார்.

மேலும், இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் முதன்மைச் செயலாளர் வினாவிய போது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு வார காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் போல் எதிர்காலத்தில் ஏற்படா வண்ணமிருக்க சீரான வடிகாலமைப்பு முறைகளின் அவசியம் பற்றி தெரிவித்த அரசாங்க அதிபர், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் இது வரை ரூபா.50 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த காணியற்ற குடும்பங்களுக்கு காணி அரசாங்கத்தின் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வீடமைப்புத் திட்டமும் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டதுடன், ஒரு நலன்புரி நிலையத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்களே தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கும் காணிக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இம் மாத இறுதிக்குள் அவ் ஒரேயொரு நலன்புரி நிலையமும் மூடப்படவுள்ளதாகவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

# அனர்த்த காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

## இளம் மீனவர் அமைப்பு வேண்டுகோள்

**பு.கஜிந்தன்**

அனர்த்த காலத்திலோ அல்லது அனர்த்த முன்னெச்சரிக்கையான காலப் பகுதிகளில் கடலுக்கு செல்லாத மீனவ குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ஜான்சன் பிரிறாடோ வேண்டுகோள் விடுத்தார்.

திங்கட்கிழமை யாழில் உள்ள விடுதியில் நடைபெற்ற வடக்கு கிழக்கு இளம் மீனவ கூட்டமைப்பின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அண்மையில் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டமையால் மீனவர்கள் கடலுக்கு செல்லாது பாதுகாப்பாக வீடுகளில் தங்கி இருந்தார்கள்.

அவர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்ற நிலையில் வடக்குக் கிழக்கில் வாழுகின்ற பெரும்பாலான மீனவர்கள் கரையோர மீன்பிடியை நம்பியே தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு




வருகின்றனர்.

இவ்வாறு புயல் எச்சரிக்கைகள் விடுக்கப்படும் நேரங்களில் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஏனெனில் ஆழ்கடல் மீன்படியில் ஈடுபடுபவர்கள் கடலில் தரித்து நின்று மீன்பிடியில் ஈடுபடுகின்ற நிலையில் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவ மக்கள் ஒவ்வொரு நாளும் கடலுக்குள் செல்ல வேண்டும்.

அதனால் கடலுக்குள் செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் அவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் கடற்தொழில் அமைச்சர் மீனவ மக்களின் நலன் கருதி அனர்த்த காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அவர்

# வடக்கை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

**கரவெட்டி நிருபர்**

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் எமது உள்ளூராட்சி மன்றங்களும் மாற்றமடைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி, வாசிப்பு மாத நிகழ்வும் பண்பாட்டு பெருவிழாவும் பருத்தித்துறை எஸ்.எஸ். மண்டபத்தில் நேற்று (11) நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்துரையாற்றிய அவர், தமிழர்களுக்கு என்று தனிச் சிறப்பான பண்பாடுகள் உள்ளன. அவை இன்று அருகி வருகின்றன. அவற்றை கட்டிக்காப்பதற்காகவே இவ்வாறான பண்பாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. அவை வரவேற்றகப்படுவதோடு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இதன் ஊடாக எமது பண்பாடுகள் காக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். குறிப்பாக வரவேற்பு, விருந்தோம்பல், நன்றி கூறல் என்பன எமது பண்பாட்டின் அடிப்படைகள். அவற்றை விட்டு நாம் இன்று வெகுதூரம் சென்றுவிட்டோமா என்ற அச்சம் ஏற்படுகின்றது. எமது மாகாணத்தின் இளையோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பல முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள். அவர்களை நாங்கள் வரவேற்க வேண்டும். எமது உள்ளூராட்சி மன்றங்கள் முதலீட்டாளர்களுக்கு உதவும் வகையில் செயற்பட வேண்டும் என்றார்.









யாழ்ப்பாணம் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் ஏற்பாட்டில் உலக மனித உரிமைத்தினத்தினை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டம். படங்கள் : **பு.கஜந்தன்**

# மாகாண மட்ட போட்டி



**பு.கஜிந்தன்**

மாகாண மட்ட ரீதியில் நடைபெற்ற "செயற்பட்டு மகிழ்வோம்" போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியானது பெண்கள் பிரிவில் தரம் 4 இல் முதலாம் இடத்தையும் தரம் 5 இல் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

மாகாண மட்ட ரீதியிலான இந்த போட்டி நேற்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

# உல்லாசப் பயணிகளின் செயற்பாட்டால் மாசுபடும் இலங்கை சுற்றுலாத்துறை...



(எஸ். டொரின்)

இலங்கை சுற்றுலாத்துறை எந்த ஆண்டும் இல்லாத வகையில் அபிவிருத்தி அடைந்து உலகலாவிய ரீதியில் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ள நிலையில் இந்த ஆண்டு இதுவரையில், 1,620,715 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணிகம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், டிசம்பர் மாதம் இரண்டாவது வாரம் வரை 210,352 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளதுனர்.

சுற்றுலா பயணிகளின் வருகையால் எமது நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைக்கப்பெற்றாலும் அவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி நாம் என்றாவது சிந்தித்தது உண்டா?

ஆம். இலங்கையை பொறுத்தவரை முழு நாடுமே ஒரு சுற்றுலாதளம் தான். இலங்கையை ரசிக்கவந்து அவர்கள் செய்யும் சில வேளைகளால் நாட்டின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் அதிகம் என்றே கூற வேண்டும்.

பொதுவாகவே ஒரு புதிய நாட்டிற்கு சென்றால் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் என ஏராளம் இருக்கின்றன. குறிப்பாக கலை, கலாசாரம், சமய அனுஷ்டானங்கள், வழிபாடுகள், உடை என அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

என்னதான் அவர்களுடைய நாட்டு கலாசார பாணியில் அறைகுறை உடைகள் அணிந்தாலும் அது எம் நாட்டு இளம் சமூகத்தை பாதிக்காத வகையில் தவறான வழியில் பின்தொடர செய்துவிடக்கூடியதாக இருந்துவிடக்கூடாது.

குறிப்பாக, சிறுவர்கள் எமது சமூகத்தின் மக்களை பார்த்தே தங்களுடைய சுய வாழ்க்கைக்கான ஒரு லைப்ஸ்டைலை உருவாக்குகின்றார்கள். அந்த சிறுவயதில் நாம் எப்படி வேண்டுமானாலும் உடைகள் அணியலாம் என்ற எண்ணம் தோன்றும் போது, அது நிச்சயமாக அவர்களுக்கு எமது நாட்டின் ஆடை, கலாசாரம் ஒரு விடயமாகவே பொருட்படாது.

மேலும், இன்றைய டிஜிட்டல் யுகத்தில் "எப்படிவேண்டுமானாலும் உடை அணிந்தால் உங்களுக்கு என்ன? அது அவர்களின் விருப்பம், நாங்கள் இப்படித்தான் இருப்போம் என பேசுகின்றார்கள். இப்படியிருக்கையில் எமது நாட்டில் கலாசாரத்தை பாதுகாப்பது என்ற கேள்வி எழுகின்றது அல்லவா?

**பொது இடங்களில் நடந்துகொள்ளும் விதம் சரியா?**

ஆம். சுற்றுலா பயணிகளை பொருத்தவரையில் கட்டுப்பாடற்று இலங்கையை சுற்றிதிரிகின்றார்கள். இவர்களுக்கென ஒரு சுற்றுலா வழிகாட்டி அல்லது கோவை உருவாக்கப்படுவது அவசியமாகின்றது.

காரணம் சமீப காலமாக சுற்றுலா பயணிகள் பொதுபோக்குவரத்தகளிலும் விசேடமாக ரயில்களில் விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகமாகும்.

இந்த விபத்துக்களில் சிலர் உயிரிழந்த சம்பவங்களும் அண்மைகாலமாக பதிவாகி வருவது மாத்திரமல்லாது, சமூக ஊடகங்களிலும் பல காணொளிகளும் பகிரப்பட்டு வைரலவாகி வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிலும் செல்ஃப்பி எடுக்கமுற்பட்டு தவறி கீழே விழுந்து காயங்களுக்கு இலக்காகும் சம்பவங்கள் மற்றும் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகமாகும். இவ்வாறான விடயங்களை தடுப்பதற்கு சுற்றுலா அதிகார சபை கட்டாயமாக ஒரு பாதுகாப்பு கட்டுப்பாட்டு கோவையை அறிமுகம் செய்வது காலத்தின் தேவையாகும்.

காரணம், இது தொடர்பான காணொளிகள் இணையத்தில் வெளியாகி வைரலாகிவருவதால், இதை அனைத்து நாட்டு மக்களும் காணக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதனால் விழிப்புணர்வு அடைவது ஒருபுறம் இருந்தாலும், சுற்றுலாத் பயணிகளின் வருகையை குறைத்துவிடும் வாய்ப்பும் அதிகமாகும்.

மேலும், கடற்கரைகளில் இவர்களின் செயற்பாடு சிலநேரங்களில் அருவருக்க தக்கவிதமாக கூட காட்சியளிக்கின்றது. காரணம் கடற்கரைக்கு சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவரும் வந்து செல்லும் ஒரு பகுதியாகும். அங்கு நாகரீகமாக நடந்துகொள்வது முக்கியமானது.

சிலநேரங்களில் நீராடச்சென்று ஆபத்தான நிலையில் மாட்டிக்கொள்வதும் அவர்கள் தான். ஆம், அஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டு பிரஜையும், வெளிநாட்டு பெண்ணொருவரும் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவம் கடந்த 10ஆம் திகதி பதிவாகியிருந்தது.

இதில் அந்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர்காக்கும் படையினர் வெளிநாட்டு ஜோடியை மீட்டு உடனடியாக சிகிச்சை அளித்தனர். குறித்த விபத்தில் 29 வயதுடைய ருமேனிய பிரஜை ஒருவரும் 30 வயதுடைய சீன பிரிஜையும் மீட்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

**இலங்கையை பற்றி அவதூறு பரப்பும் சுற்றுலாப் பயணிகள்**

லண்டனில் நடைபெற்ற Wanderlust Reader Travel Awards 2024 இல் உலக சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் விரும்பத்தக்கத் தீவு நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆனாலும், சில விடயங்களை உற்று நோக்கினால், சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவை சந்திக்கும் செயற்பாடுகளிலும் இந்த சுற்றுலா பயணிகள் ஈடுபட்டதை கடந்த காலங்களில் காணக்கூடியதாக இருந்தது.

ஆம், மயில்வேட்டையில் ஈடுபட்டமை, உணவகம் ஒன்றில் சரியாக விலைகள் தெரியாமல் ஏமாற்றமடைந்து பின்னர் அவர்கள் அதை தங்களது சமூக ஊடகங்களில் காணொளியாக வெளியிட்டு பெரும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான சந்தரப்பங்களில் இலங்கையர்கள் மீதும் தவறு இருக்கின்றது. காரணம் சுற்றுலா பயணிகள் என்ற உடனே அவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் வேளையில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறான செயற்பாடகளை எம்மவர்கள் தவிர்த்துக்கொள்வதும் சிறந்தது.

இவ்வாறான சந்தரப்பங்களில் சுற்றுலாப்பயணிகள் தங்களின் சுயலாபத்துக்காக எழும் பிரச்சினைகளை காணொளியாக பதிவு செய்து யுடியுப் போன்ற தளங்களில் பதிவேற்றி அதன் மூலம் இலாபமீட்டுகின்றனர்.

இதன்பின்னால் வரும் பிரச்சினை தொடர்பில் அவர்கள் சிந்திப்பது கிடையாது.

**இலங்கை சுற்றுலாத்துறையினால் பொருளாதாரத்தின் வளர்ச்சி**

இலங்கையின் பொருளாதாரம் விழ்ச்சியில் இருந்தபோது சுற்றுலாத்துறையில் பங்களிப்பு அந்த இக்கட்டான சூழலில் நாட்டுக்கு நன்மை பயத்தையும் மறந்துவிடமுடியாது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான சுற்றுலா வருமானம் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆக பதிவான நிலையில் இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 56% அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் (CBSL) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1,804,873 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) சமீபத்திய புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

2024 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 2.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் இலக்கை நெருங்கி வருகின்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பொருளாதார குறிகாட்டி அறிக்கையின் படி கடந்த ஆண்டு நவம்பர் மாத சுற்றுலா வருமானமான 205.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், இந்த நவம்பரில் 272.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான சுற்றுலா வருமானம் 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும், இது கடந்த ஆண்டு ஜனவரி மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையேயான 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் 56% அதிகரிப்பைக் குறிக்கிறது.

இந்த ஆண்டு நவம்பரில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து வைப்புச் செய்யப்பட்ட வெளிநாட்டுப் பணம் 530.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளதுடன், இது ஒக்டோபரில் பதிவு செய்யப்பட்ட 517.4 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

ஓகஸ்ட் 2024 இல் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களின் பணம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 425 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

**இலங்கையின் சுற்றுலா வருமானத்தில் பாரிய அதிகரிப்பு**

**Sri Lanka S Tourism Revenue Up By 56 Percent 2024**

2023 இல், தொழிலாளர்கள் அனுப்பிய பணம் ஜனவரி முதல் நவம்பர் வரை 5.39 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன் 2024 ஜனவரி முதல் நவம்பர் வரை பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பணம் 5.96 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான வெளிநாட்டுப் பணம் அனுப்புதல்களின் மொத்த வரவு, ஆண்டுக்கு ஆண்டு 10.4% வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது

**சுற்றுலாபயணிகள் தங்களின் சுயலாபத்துக்காக எழும் பிரச்சினைகளை காணொளியாக பதிவு செய்து "யுடியூப்" போன்ற தளங்களில் பதிவேற்றி அதன் மூலம் இலாபம் ஈட்டுகின்றனர். .!**



**செல்ஃப்பி எடுக்கமுற்பட்டு தவறி கீழே விழுந்து காயங்களுக்கு இலக்காகும் சம்பவங்கள் மற்றும் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகமாகும்...!**





### விவசாய விளைபொருட்களை ஊக்குவிக்க

# இடைத்தரகர்கள் இல்லாத சந்தையை உருவாக்க வேண்டும்

### வடமத்திய மாகாண ஆளுநர்



(எம்.ரீ.ஆரிப்)

விவசாய விளைபொருட்களை ஊக்குவிக்க இடைத்தரகர்கள் இல்லாத நல்ல சந்தையை உருவாக்கி மக்களின் வாழ்வை உயர்த்த வேண்டுமென வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தெரிவித்தார்.

வடமத்திய மாகாணத்தில் கிராமிய மட்டத்தில் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த வடமத்திய மாகாண ஆளுநர் இலங்கை வரலாற்றில் மிகச்சிறந்த காலகட்டமாக கருதப்படும் பண்டுகாபய மன்னனின் ஆட்சிக்காலத்தில் செழிப்பான விவசாய சகாப்தம் உருவாக்கப்பட்டது. பண்டுகாபய மன்னர் காலத்தில் கரவாயாவையை நிறுவினார். இதில் திட்டமிட்ட நிர்வாகத்தையும் செயற்படுத்தினார். அதேநேரம் விவசாயம் தன்னிறைவு பெற்ற நாடாக இருந்தது. 400 வருட காலனியத்திற்கு பிறகு ஏற்பட்ட விபரீத ஆட்சியினால் நமது நாடு தற்போது இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த தன்னார்வ படையை உருவாக்குவதன் மூலம் நாட்டில் நவீன விவசாய தொழில்நுட்பங்களுடன் முறையான பயிற்சிகள் வழங்கப்படும். வடமத்திய மாகாணத்தில் நெல் மற்றும் சோளம், பிரதான பயிர்கள், பழங்கள் மற்றும் மரக்கறி பயிர்கள் போன்றவைகள் தேசிய பொருளாதாரத்திற்கு உதவி வருகின்றன.

இதற்கு விவசாய அதிகாரிகள் மற்றும் விவசாய ஆலோசகர்கள் பற்றாக்குறையால், விவசாயிகளுக்கு விவசாய தொழில்நுட்ப நவீன முறைகள், விவசாய விரிவாக்க சேவையினை வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன. அதற்கான தீர்வாக வடமத்திய மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவும் பிரதிநித்துவப்பட்டுள்ளது.

தன்னார்வ விவசாய விரிவாக்க உதவியாளர்களைத் தேர்ந்தெடுத்து விவசாய விரிவாக்க அறிவு , திறன் மற்றும் மனப்பான்மையை வளர்த்து விவசாய விரிவாக்க சேவையினை அதிகரிக்க சுமார் 600 விவசாய குழுவினருக்கு 02 நாள் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் போது மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சமன் குமார ஜயலத், மாகாண விவசாய பணிப்பாளர் புத்திக அபேசிங்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் ஆர்.ஆனந்த குமார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# வாதுவையில் தீப்பற்றி வீடொன்று சாம்பலான



களுத்துறை – வாதுவை, பொத்துபிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று திடீரென ஏற்பட்ட தீ விபத்து காரணமாக குறித்த வீடுமுழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்குச் சென்ற களுத்துறை மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து தீ பரவலை கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். எவ்வாறிருப்பினும், தீ விபத்தில் எவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இருந்தும் குறித்த வீட்டின் பெண்ணொருவர் விளக்கை ஏற்றி விட்டுச் சென்றதால், அந்த விளக்கு கீழே விழுந்து தீப்பிடித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.எவ்வாறாயினும், தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கிராமங்களுக்குள் வரும்

# யானைகளை காட்டுக்குள் அனுப்பும் நடவடிக்கை



(எம்.ரீ.ஆரிப்)

இபலோகம பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட கிராமங்களுக்குள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் அதிகரித்துவருவதால் காட்டு யானைகளை வனப்பகுதிக்கு விரட்டி, யானை வேலியை செயல்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

அதன்படி மஹா இலுப்பள்ளம் நகர. எல்லை, சமனலபுர, உதேனிபுர, கலே திவுல்வெவ, மாதுறுவாகம, சேனபுர மற்றும் புளியங்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள வனப்பகுதியில் தங்கி நிற்கும் அதிகமான காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு ள்ளது. வனவிலங்கு திணைக்களம், இபலோகம பொலிஸ் நிலையம், இபலோகம பிரதேச செயலகம் மற்றும் கள நோய் ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் உதவியுடனும் பிரதேசவாசிகளின் பங்களிப்புடனும் காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மஹா இலுப்பள்ளம் நகருக்கு அருகில் இருந்து பல கிலோமீற்றர் தூ ரத்திற்கு காட்டு யானைகளை விரட்டியடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு ட்ரோன் கமராக்களை உபயோகித்து யானைகளின் நடமாட்டம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காட்டு யானையை விரட்டும் நடவடிக்கை தொடர்ந்து அமுல்படுத்தப்படவுள்ளதுடன் நல்லமுதாவ அரச வனப்பகுதிக்கு காட்டு யானைகளை விரட்டிய பின் யானை வேலியை அரசாங்கம் செயல்படுத்தவுள்ளது.

### வர்த்தகர்களினால் ஆக்கிரிமிக்கப்பட்டுள்ள

# நடைபாதைகளை விடுவிக்குமாறு அறிவித்தல்

(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி நகர் புறங்களிலுள்ள வீதியின் இரு மருங்கிலும் நடைபாதைப் பகுதியில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அத்தோடு கடை உரிமையாளர்களினால் வைக்கப்பட்டுள்ள வியாபாரப் பொருட்கள் மற்றும் விளம்பர பதாகைகள் என்பவற்றை அகற்றுமாறு கற்பிட்டி பிரதேச சபையினால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொது மக்களின் நடைபாதைகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக வைக்கப்பட்டுள்ள சகல பொருட்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதிக்குள் அப்புறப்படுத்துமாறு கற்பிட்டி பிரதேச சபையினால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக 13 ம் திகதிக்கு பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கற்பிட்டி பிரதேச சபையின் பகிரங்க அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# ஒருங்கிணைப்பாளராக ரோஸன் நியமனம்

(எம்.எஸ்.எம். ஸாகிர்)



தெமட்டகொடயை வசிப்பிடமாகவும், அறக்கியாளை கிராமத்தை பிறப்பிடமாகவும் கொண்ட மொஹமட் நஸார் மொஹமட் ரோஸன் மனித உரிமைகள் லங்கா அமைப்பின் கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.இந்த நியமனம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

தற்போது முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரியான இவர்,வக்பு நியாய சபையின் பதில் செயலாளராகவும் கடமையாற்றுகிறார். சமூகப்பணி இளமாணி விஷேட பட்டத்தை (Bachelor of Social Work (Hons) - BSW) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (ஜேஹுனு) மூலம் பெற்ற ஒரு பட்டதாரியான இவர், தனது பாடசாலைக் கல்வியை கிரி/அறக்கியாளை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும், கிரி/ கெகுணகொல்லை தேசிய பாடசாலையிலும் பயின்றுள்ளார்.

# புத்தளம் பொது நூலகத்தின் சிறுவர் பிரிவு புனர்நிர்மாணம்



(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் பொது நூலகத்தின் சிறுவர் பிரிவு, எலைன்ஸ் பினேன்ஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் புணர் நிர்மாணம் செய்யப்பட்டு அண்மையில் உத்தியோக பூர்வமாக பிரதம நூலகர் கே.எம்.நிஷாத்திடம் கையளிக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் புத்தளம் நகர சபையின் செயலாளர் கீதானி ப்ரீத்திகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், சிறுவர்களுக்கு தேவையான விளையாட்டுப் பொருட்கள், தளபாடம் மற்றும் ஏனைய உபகரணங்கள் எலைன்ஸ் பினேன்ஸ் நிறுவனத்தினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் சிறந்த வாசகர்களுக்கான விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டிற்கான விருதுகள் பரிதா ரஜாப், எச். சந்திரிகா, பீ.எம். மஹீஷா இமந்தி மற்றும் ஆர்.பி. ருபைமான் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

குறித்த நிகழ்வின் நினைவாக நூலக வளாகத்தில் மரங்களும் நடப்பட்டதுடன், வருகை தந்த வாசகர்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# பெற்றோர்களுக்கான விசேட கலந்துரையாடல்



(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் 2025 ம் ஆண்டு தரம் 01 ல் இணைய உள்ள புதிய மாணவர்களின் பெற்றோர்களுக்கான விசேட கலந்துரையாடலொன்று நேற்று புதன்கிழமை (11) பாடசாலையின் அதிபர் எம் எம் எம் நவ்ப் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய தரம் ஒன்று மாணவர்களை இனங்காணல் செயற்பாடுகள், கற்றல் நடவடிக்கைகள், வகுப்பறை, அமைப்புக்கள் , சுற்றுச்சூழல் தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவித்த அதிபர் எம் எம் எம் நவ்ப்,புதிய தரம் ஒன்று பெற்றோர்களைக் கொண்ட ஏழு பேர் தெரிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்; மேலும் இருவர் கைது

(எம்.ரீ.ஆரிப்)

பதவிய போகஹவெவ பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரை கைது செய்துள்ளதாக பதவிய பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மஹியங்கனை மற்றும் எஹடுகஸ்வெவ பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 30 வயதுடைய இருவரை பொலிஸ ார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய கிரியிப்பன்வெவ பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய பிரதான சந்தேக நபர், புல்மோட்டை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் வெலிஓயா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ரி 56 துப்பாக்கி மற்றும் ரிவோலர் கைப்பற்றப்பட்டுள்ளதோடு நீதிமன்ற உத்தரவைப் பெற்று பொலிஸ் தடுப்பில் வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வெலிஓயா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற துப்பாக்கி தாரி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சாரண மாணவர்களுக்கான தங்க நட்சத்திர விருது





தெமட்டகொடை கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஷாம் ரிபாய் ஹாஜியார் அரங்கில் '78 th Colombo Zulu' சாரணர் மாணவர்களுக்கான தங்க நட்சத்திர விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.இதன்போது விருது பெற்ற சாரணர்களை படத்தில் காணலாம்.

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்கள்

# ரூ.4000 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் உட்கட்டுமான பணிகள் பூர்த்தி



(ஜெளபர் ஏ கரீம்)

ஐரோப்பிய யூனியன் உலக வங்கியுடன் இணைந்து அரசாங்கத்தின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு சுமார் 4000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உட்கட்டுமான பணிகளுடன் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முடிவுறுத்தல் தொடர்பான மாகாண இறுதி விழா கோறளைப் பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட வேறு பல நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி அபிவித்தி உதவி திட்டத்தின் கீழ் சுமார் 4000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வருமானத்தை ஈட்ட வசதியாக உள்ள கட்டிடங்கள், பூங்காக்கள், வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட 956 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. இத்திட்டத்தை மக்களின் நன்மை கருதி மிகவும் திறம்பட செயலாற்றிய 45 உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் உதவி திட்ட பணிப்பாளருமான (LDSP) என். மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி அபிவிருத்தி உதவி திட்டத்தின் பணிப்பாளர் திஷா நாயக, உதவி திட்ட பிரதிப் பணிப்பாளர் திமுது ரன்சிங்க, மாநகர ஆணையாளர்கள், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உட்பட மற்றும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். ஏ.கே. முகம்மதுக்கு உள்ளூராட்சி உதவி திட்டத்தின் பணிப்பாளர் திசாநாயக்க நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதை காணலாம்.

# அட்டாளைச்சேனை பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம்





(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச அனர்த்த முகாமைத்துவ குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பீ.டி.எம். இர்பான் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தை வழிநடாத்தினர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தகவல்களை பிரதேச செயலாளர் மற்றும் உரிய தரப்பினர் இங்கு தெரியப்படுத்தியதுடன் அது தொடர்பில் தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பாதிப்புக்களையும், அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கான தேவையையும் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் அமைச்சு மட்டத்தில் அதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, வீதி, கால்நடை, வடிகான், கல்வி, சுகாதாரம், மின்சாரம், பாதுகாப்புத் துறை சார்ந்த பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக கூட்டத்தில் கலந்து கொண்ட திணைக்களங்களின் அதிகாரிகள் இங்கு அறிவுறுத்தப்பட்டமை விசேட அம்சமாகும்.

இங்கு அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், அட்டாளைச்சேனை ஜ/ம்ஆப் பள்ளிவாசல் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல். ஹனீஸ், துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் (விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர், கிராம நிலதாரிகள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள்) உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மாணவர்களுக்கிடையில் விவாதப் போட்டிகள்









(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

பாடசாலை மாணவர்களுக்கிடையில் கல்வி, தலைமைத்துவம், ஆளுமை விருத்தி, படைப்பாற்றல்கள், திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டு வருவதாக விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் புண்ணியமூர்த்தி ஜீவிதா தெரிவித்தார். மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கற்கும் பாடசாலைப் பிள்ளைகளின் அறிவு, திறன், தேர்ச்சியினை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஈகுவாலிட்டி கிளப் செயற்பாடுகளில் பங்குபற்றி விவாதப் போட்டியில் வெல்லும் பாடசாலை அணிகளைத் தெரிவு செய்து, பரிசும் பாராட்டும் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லடி தனியார் விடுதியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட 120 மாணவர்களுக்கிடை யிலான இறுதி விவாதமாக ஸ்மார்ற் போன் பாவனை மூலம் நன்மையா தீமையா என்ற விவாதம் இடம்பெற்றது. இதில் தரம் ஏழு பிரிவைச் சேர்ந்த ஏறாவூர்ப்பற்று, கோறளைப் பற்று ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பாடசாலை அணிகள் இறுதி விவாதப் போட்டியில் பங்குபற்றிய நிலையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பலாச்சோலை இளந்தளிர் ஈகுவாலிற்றி கிளப் அணி 76 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற மாணவர் அணிக்கு பாடசாலைத் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்காக ஒரு இலட்ச ரூபாய் பணப்பரிசும், மாணவர்களுக்கு, பதக்கமும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# கல்முனை சுகாதார பிரிவில் டெங்கு நோய் பரவும் அபாயம்

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ள நிலைமை காரணமாக கல்முனை மாநகர பிரதேசங்களில் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக டெங்கு நோய் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளதாக கல்முனை மாநகர வரியிறுப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். கல்முனை மாநகர பிரதேச எல்லைக்குள் வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்கள் பல வருடங்களாக துப்புரவாக்கப்படாமல் குப்பைகூளங்களும், மண்ணும் நிரம்பி வடிகான்களூடான நீரோட்டம் முற்றாக தடைப்பட்டுக் கிடப்பதனால் இந்த ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது. வீதியோரங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பை கூளங்களை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றும் ஊழியர்களால் அகற்றப்படவில்லை. இதன்காரணமாக அவற்றின் ஊடாகவும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து தொற்று நோய்களும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கல்முனை மாநகர திண்மக்கழிவகற்றும் பிரிவின் தொழிலாளர்கள் வீடுகளில் இருந்து பேக்குகள் மூலம் கையளிக்கும் குப்பை கூளங்களை மட்டும் சேகரித்துக்கொண்டு செல்வதனால் கல்முனை மாநகர வீதிகள் குப்பைக்காடாக காட்சியளிக்கின்றது. கல்முனை மாநகர பிரதேசங்களில் உள்ள சில வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகான்களுக்கான மூடிகள் இடப்படாமை காரணமாக அவற்றுக்கு அருகில் உள்ள பொதுமக்கள் சிலர் வடிகான்களுக்குள் குப்பை, கூளங்களை போடுகின்றனர்.இதன் காரணமாக துர்நாற்றம் ஏற்பட்டு அப்பகுதிகளால் பிரயாணம் செய்ய முடியாத நிலையும் காணப்படுகிறது. கல்முனை மாநகர சபையில் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத இக்கால கட்டத்தில் அதிகாரிகளின் பங்களிப்பு மிக அவசியமானதாகும்.ஆயினும் கல்முனை மாநகர ஆணையாளர் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் கடமைக்கு வரும் பதில் ஆணையாளரை சந்திக்க முடியாத நிலையும் காணப்படுகிறது .

எனவே கல்முனை மாநகர பிரதேசங்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் குறித்து கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவு, திண்மக்கழிவகற்றல் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன கூடிய கவனம் செலுத்தி கல்முனை மாநகர மக்களை தொற்று நோய்களில் இருந்து காப்பாற்ற வேண்டும் என மாநகர வரியிறுப்பாளர்கள் கோருகின்றனர்.

# மாகாண அமைச்சின் செயலாளராக குணநாதன்

(எஸ்.கீதபொன்கலன்)



கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு, கலாசார அலுவல்கள், முன்பள்ளி கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம், திறன்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் சிரேஸ்ன அலுவலர் கே.குணநாதன் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவினால் நேற்று (11) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து நியமிக்கப்பட்டார்.

# கலாநிதி றிப்கிக்கு பதவியுயர்வு



(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்றைச் சேர்ந்த கலாநிதி ஏ.எல்.எம்.றிப்கி, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் அண்மையில் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கலாநிதி றிப்கியின் சாதனைப் பயணம் உண்மையிலேயே அபரிதமானது. இலங்கையின் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியான இவர், உணவு விஞ்ஞானத்தில் முதுகலை (MSc) பட்டத்தினை பேராதனை பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். அதைத் தொடர்ந்து உஸ்பகிஸ்தானில் உணவுத் தொழில்நுட்பம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் முனைவர் (Ph.D) பட்டமும் பெற்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமணி (LLB) பட்டத்தையும் பெற்றுள்ள இவர் உயர் நீதிமன்ற சட்டத்தரணியும் ஆவார்.

கலாநிதி றிப்கி, விஞ்ஞானம் மற்றும் சட்டம் ஆகிய இரண்டு துறையிலும் நிபுணத்துவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளுக்கு தாஹிர் எம்.பி கள விஜயம்

(எஸ். சினீஸ்கான்)



பாடசாலைகளின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்யும் நோக்கில் அனைத்து பாடசாலைகளுக்குமான கள விஜயமொன்றை நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் முன்னெடுத்து வருகிறார். அந்த வகையில் செவ்வாய்கிழமை நிந்தவூர் பதுரியா வித்தியாலம் மற்றும் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயம் ஆகியவற்றிற்குச் சென்று அங்குள்ள குறைபாடுகளை கேட்டறிந்தார். அத்துடன் மாணவர்களின் தேவைகள், குறைபாடுகளை அறிந்து செயலாற்றும் நோக்கில் "குறைகேள்" பெட்டி யொன்றையும் கையளித்தார். இதன் போது பதுரியா வித்தியாலயத்தின் அதிபர் மௌலவி ஜெசீர் அலி தலைமையில் பாடசாலைச் சமூகத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினர் வரவேற்கபட்டதுடன் ஆசிரியர்கள் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர். அதேபோல் இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தின் அதிபர் ஜாபிர் தலைமையில் பாடசாலை மாணவர்களினால் பேண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டிருந்ததுடன் உயர்தர பிரிவு மாணவர்களின் வகுப்பறை பௌதீக குறைபாடுகளை நேரடியாக அழைத்துச் சென்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# 465 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள்



(ஜெளபர் ஏ. கரீம்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட 465 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை இறக்காமம் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசல் இணைந்து இறக்காமம் பிரதேச செயலாளர் ஊடாக விடுத்த வேண்டுகோளையடுத்து தெகிவளை எம்.டீ. லாவண்யா மஸ்ஜித் அமைப்பு சுமார் 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இறக்காமம் ஜம்மியதுல் உலமா சபையின் செயலாளர் எம். கே. எம். ருவைஸ் மௌலவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம். எஸ். எம். ரஸ்ஸான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

பால்மா, அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, டின் மீன் உள்ளிட்ட தலா 5700 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை 465 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர்களான எம். ஏ. சி. அஹமட் நசீல், திருமதி ரொவிந்தாஜ், இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ. கே. ஏ. ரவுப், ஜம்மத்தில் உலமா சபையின் இறக்காமம் கிளை தலைவர் மௌலவி அப்துல் வஹ்ஹாப், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எம். ஹம்சார் மற்றும் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## வரவு- செலவுத் திட்டத்தில்

# பெருந்தோட்ட மக்களுக்கு விசேட திட்டம்



### கலைச்செல்வி எம்.பி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

வரவு- செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் விசேட வேலைத்திட்டமொன்று செயல்படுத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி தெரிவித்தார். அத்தோடு மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை, வீட்டு உரிமை கட்டாயம் பெற்றுக் கொடுக்கப்படும். இது தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை என்றார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற, 545 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

காணி உரிமை என்பது எமக்குரிய சொத்து. எனவே, கிடைக்கப்பெற்றுள்ள காணி உரிமையை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலையக மக்களுக்குரிய வீட்டுரிமை, காணி உரிமை என்பன 200 வருடங்களாக கனவாகவே இருந்து வருகின்றது. தேசிய வருமானத்துக்கு பங்களிப்பு செய்தும் இந்நிலைமையே காணப்பட்டது. எமது மக்களின் காணி, வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். எமது ஆட்சியில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். மலையகத்தில் வாழும் சகலருக்கும் வீட்டுரிமை, காணி உரிமை என்பன பெற்றுக் கொடுக்கப்படும்.

காலை முதல் மாலைவரை வேலை செய்தாலும் சொற்பளவு சம்பளமே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கப் பெறுகின்றது. அதனை வைத்து அன்றாட தேவையைக்கூட பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. எனவே, வரவு- செலவுத் திட்டத்தில் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

# விக்டோரியா நீர்த்தேக்கத்திற்குள் குவிந்துள்ள குப்பை கூளங்கள்

(எம்.ஏ.அமீனுல்லா)

மகாவலி ஆற்றங்கரையில் மழை வெள்ளத்தை தொடர்ந்து கரைதட்டிய பெருமளவான பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் மீள்சுழற்சி செய்ய முடியாத தொன் கணக்கான கழிவுப் பொருட்கள் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்குள் புகுந்துள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கண்டி,லெவெல்ல பாலத்திற்கு அருகாமையில் இந்த கழிவுகள் குவிந்துள்ளதுடன், விக்டோரியா அணைக்கு பொறுப்பான பிரதம பொறியியலாளர் வசந்த எஹலபிட்டியவின் முயற்சியின் கீழ் அவற்றை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்பும் இதேபோன்ற பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் போன்ற பிற கழிவுகள் போட் மூலம் அகற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கண்டி, லேவெல்ல பாலம் கட்டப்பட்ட பின்னர், அந்த இடத்தில் உள்ள பழைய சங்கிலி பாலத்தின் ஒரு பகுதி தண்ணீரின் மேற்பரப்பில் விழுந்துள்ளதால், நீரில் அடித்து வரும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பிற கழிவுகள் அவற்றில் தங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகிது. இந்த பாலத்தின் பாகங்களை அகற்றுமாறு கண்டி மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.



# சிவனொளிபாதமலைக்கு வருவோர் பிளாஸ்டிக்கை தவிர்க்கவும்

### மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தல்

சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று (11) அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்கு வருகை தரும் போது, தங்களால் அதிகமான குப்பைகள் சேரும் சந்தரப்பத்தில் அதை தங்களுடனேயே எடுத்துச் செல்லுமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், சிவனொளிபாதமலை யாத்திரைக்கு செல்லும் முக்கிய நுழைவாயில்களில் (அதாவது நல்லத்தண்ணி பாதை மற்றும் இரத்தினபுரி வழியாக வரும் இரண்டு பாதைகளில்) உள்ளூராட்சி அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் சிவனொளிபாதமலை யாத்திரை காலத்தில் நடத்தும் குப்பை சேகரிப்பு மையங்களில் ஒப்படைக்குமாறு அனைத்து யாத்திரிகர்களிடமும் மத்திய சுற்றாடல் அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அரிசியை அதிக விலைக்கு விற்ற வியாபாரிகளுக்கு சட்ட நடவடிக்கை

(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் அரிசியின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த பல வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட நுகர்வோர் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு நாட்டு அரிசியை விற்பனை செய்த பல வர்த்தகர்களுக்கு எதிராக நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (11) சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அமில ரத்நாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா, ரதெல்ல மற்றும் அக்கரப்பத்தனை, ஹோல்புறுக் ஆகிய பகுதிகளில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகர்களை கைது செய்வதற்காக குறித்த அதிகாரிகள் நேற்றும் (11) சோதனை நடவடிக்கையில் ஈடுப்பட்டனர்.

நுவரெலியா மாவட்டம் முழுவதும் இவ்வாறான சோதனைகள் தொடரும் என தலைவர் அமில ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

# "தேங்காய் உற்பத்தி வீழ்ச்சிக்கு செய்கையாளர்களும் காரணமாகும்"



தேங்காய் உற்பத்தி வீழ்ச்சிக்கு செய்கையாளர்களின் பராமரிப்பு இன்மையும் ஒரு காரணமென தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பதில் பிராந்திய முகாமையாளர் ஈஸ்வரன் சற்குணன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் குறித்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தேங்காய் விலை அதிகரிப்புக்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அதில் பசளை விநியோகமும் ஒன்றாகும். அதாவது தென்னை மரத்துக்கு ஒவ்வொரு வருடமும் பசளையிட வேண்டும்.

இதேவேளை,இரசாயன பசளை கடந்த இரண்டு வருடங்களாக தடைப்பட்டிருந்தது. இதனால் பெருமளவு செய்கையாளர்கள் பசளை விநியோகத்தை மேற்கொள்ள வில்லை. பீடைகளின் தாக்கமும் காரண மாக விளங்குகின்றது.

தென்னைக்கு தொடர்ந்து நீர் விநியோகம் செய்ய வேண்டும். சிலர் நான்கு ஐந்து வருடங்களோடு நீர் விநியோகத்தை நிறுத்துகின்றனர்.

இவ்வாறான சிறந்த பராமரிப்பு இன்மையும் தென்னை உற்பத்தியின் வீழ்ச்சிக்கும் விலை அதிகரிப்புக்கும் காரணம் எனவும் தெரிவித்த பதில் பிராந்திய முகாமையாளர் ஈஸ்வரன் சற்குணன் செய்கையாளர்கள் சரியான முறையில் பசளை மற்றும் நீர் விநியோகங்களை மேற்கொள்கின்ற போது உற்பத்தியை அதிகரிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

# வன விலங்குகளால் பயிர்கள் சேதம்; கிராம மட்டத்தில் விசேட குழு



(எம்.ஏ.அமீனுல்லா)

வன விலங்குகளால் பயிர்கள் சேதமாக்கப்படுவதைத் தடுக்க ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவிலும் விவசாய திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள் மற்றும் காணி அமைச்சர் கே.டி லால்காந்த தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையை விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் சரியாக இனங்கண்டு, அவர்களின் முன்மொழிவுகள் மூலம் வழங்கப்பட வேண்டிய தீர்வுகள் கண்டறியப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் பின்னர், நேற்று (11) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு, தொடர்ந்துரையாற்றிய அவர்,

மேற் குறிப்பிட்ட பிரிவால் மக்களுக்கு வன விலங்குகளிலிருந்து விவசாய நிலத்தைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து போதிய அறிவும் பயிற்சியும் அளிக்கப்படும்

பிரச்சினைக்கு நீண்டகால தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில் இந்த வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகின்றோம்.

கண்டி மாவட்டத்தில் 1555 பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகள் உள்ளன.

அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு முன், முன்மொழிவுகளைப் பெறுமாறு விவசாய சேவைகள் திணைக்களத்திற்கு விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். அதன்படி, இந்த வேண்டுதலுக்கான பதிலை மிக விரைவில் வழங்குவதே எங்கள் நோக்கம். வன விலங்குகளைக் கொல்ல வேண்டும் என்று நான் ஒருபொழுதும் கூறவில்லை. எது எப்படி இருந்தாலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டால் நல்லது. ஏனென்றால், இப்படி ஒரு பிரச்சினை இருப்பதை விவசாயிகள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

### டுபாய் "காஞ்சனா" வின் முகவர்

# ஹெரோயினுடன் கைது



டுபாய் நாட்டில் தலைமறைவாகியுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான "காஞ்சனா" என்பவரின் பிரதான முகவர், 13 கோடி பெறுமதியான ஹெரோயின், ஐஸ் மற்றும் போதை மாத்திரைகளுடன் கஹதுடுவ, பொல்கஸ்சோவிட பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று (11) கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபட பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் பணிப்புரைக்கு அமைய விசேட அதிகாரிகள் குழு தேடுதலை நடத்தியுள்ளது. பொலிஸ் நாயின் உதவியுடன் கெஸ்பேவ பிரதேசத்திற்கு கொண்டுவரப்பட்ட 1 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளை கொண்டு, மேலதிக விசாரணையின் போது, பொல்கஸ்சோவிட்ட பகுதியில் உள்ள வாடகை வீட்டில் 5 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 1.5 கிலோ ஐஸ் போதை மாத்திரைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதிரடிப்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் போது மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில், இந்த போதைப்பொருள் கையிருப்பு டுபாயில் பதுங்கியிருக்கும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான "காஞ்சனா" என்ற பெண்ணுக்கு சொந்தமானது என தெரியவந்துள்ளது. சந்தேகநபர் வசிக்கும் வீட்டை காஞ்சனா வாடகைக்கு அடிப்படையில் எடுத்து வீட்டில் போதைப்பொருளை பதுக்கி வைத்து பல்வேறு பகுதிகளுக்கு போதைப்பொருள் விநியோகம் செய்யும் இடமாக பயன்படுத்தியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் போதைப்பொருள் விசாரணைகளுக்காக போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# உலக மனக் கணிதப் போட்டியில் பங்கேட்றோர்




(பு.கஜிந்தன்)

இந்திய தலைநகர் டெல்லியில் நடைபெற உள்ள உலகளவிய UCMAS மனக் கணித போட்டியில் 30 நாடுகளில் இருந்தது போட்டியாளர்கள் பங்குபற்றுகிறார்கள்.

அதில் இலங்கையில் இருந்து 103 மாணவர்கள் பங்கு கொள்ளகின்றார்கள். அந்தவகையில் யாழ். திருநெல்வேலி ucmas centre இல் இருந்து 30 மாணவர்கள் பங்கு கொள்கின்றனர்.

இதில் 4 மாணவர்கள் UCMAS உலக கோப்பைக்கான (world cup) மனக்கணித போட்டியில் பங்குக்கொள்ள தெரிவகியுள்ள நிலையில், திருநெல்வேலி சென்டர் இல் 2 மாணவர்கள் பங்கு கொள்கிறார்கள்.

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட அறுவர் கைது

(க.கிஷாந்தன்)

காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர்வழங்கும் டிக்கோயா ஆற்றுப் பகுதியில், சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுப்பட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். அத்தோடு, மாணிக்ககல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன் – டிக்கோயா வனராஜா தேயிலை தொழிற்சாலைக்கு பின்புறம் உள்ள டிக்கோயா ஆற்றுப்பகுதியில் சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஹற்றன் பொலிஸார் சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பலாங்கொடை, ஹற்றன் மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25-40 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் சுற்றிவளைப்பை மேற் கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

# கடல் உயிர்கள் உயிரிழப்பு தொடரும் அபாயம்

திருவொற்றியூர் கடற்கரையில் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமையும், இராமேஸ்வரம் கடல் கரையில் திமிங்கலம் ஒன்றும் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ள சம்பவம் சூழலியல் ஆர்வலர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பூமி மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானது கிடையாது. ஆனால் சமீப காலமாக இதனை மறந்து மனிதர்கள் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகள் சூழலியலை கடுமையாக பாதிக்கிறது. குறிப்பாக கடல் வாழ் உயிரினங்களின் அழிவுக்கு இது இட்டுச் சென்றிருக்கிறது. இதில் அதிகம் பாதிக்கப்பட்ட உயிரினம் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமைகள்தான்.



சாதாரண மீன்பிடி படகுகள் மூலம் ஆமைகளுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் இழு வலையை பயன்படுத்தும் பெரிய கப்பல்கள் இந்த ஆமைகளின் அழிவுக்கு காரணமாக இருக்கிறது.

இழு வலை மீன்களோடு சேர்த்து ஆமைகளையும் இழுத்து வந்துவிடுகிறது. ஆமைகள் வலையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பே அவை இறந்துவிடுகின்றன. இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக TED எனப்படும் ஆமைகளை விடுவிக்கும் கருவிகளை நவீன மீன்பிடி படகுகளில் பொருத்த வேண்டும் என்று மேலை நாடுகளில் சட்டம் காணப்படுகிறது. ஆனாலும் இது எதிர்பார்த்த அளவுக்கு பலனை அளிக்கவில்லை. வலைகள் தவிர, படகுகளின் என்ஜின் இறக்கைகள் மோதுவதாலும் ஆமைகள் இறந்துவிடுகின்றன. மேலும் ஒளி மாசு ஆமைகளின் எண்ணிக்கை குறைவுக்கு மிகப்பெரிய காரணமாக இருக்கிறது.

ஆலிவ் ஆமைகள் கடற்கரையில் முட்டைகளை இடுகின்றன. முட்டைகளிலிருந்து வெளிவரும் குட்டி ஆமைகளால் தலையை உயர்த்தி பார்க்க முடியாது. கரையிலிருந்து பார்க்கும்போது கடல்தான் ஒளிமிக்க பகுதியாக தெரியும். கடல் சூரிய ஒளியை, நிலவின் ஒளியை எதிரொலிப்பதால் அப்படி தெரிகிறது. ஒளிமிக்க பகுதி எதுவோ அதை நோக்கித்தான் பயணிக்க வேண்டும் என்பது ஆமைகளின் மரபணுவில் காலம் காலமாக கடத்தப்பட்ட ஒரு தகவல். எனவேதான் ஆமை குஞ்சுகள் பொரிந்தவுடன் கடலை நோக்கி பயணிக்கின்றன. ஆனால் தற்போது கடற்கரையில் சொகுசு விடுதிகள் உள்ளிட்டவை அதிகரித்துவிட்டன. எனவே ஆமைகள் தனது பாதையை மாற்றி நிலப்பரப்புக்கு வந்து உயிரிழந்துவிடுகிறது. டைனோசருக்கு முன்பிருந்து வாழ்ந்து வந்த இந்த ஆமை இனங்கள் மனித நடவடிக்கைகளால் அழிந்து வருவது கவலையை ஏற்படுத்தியுள்ளதாக சூழலியளார்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஆமையின் ஆயுள் இப்படி முடிகிறது என்றால், மறுபுறம் திமிங்கலங்களின் கதை சற்று வித்தியாசமானது. இது அளவில் பெரிதாக இருந்தாலும், இதனால் பெரிய உயிரினங்களை சாப்பிட முடியாது. அதை துண்டு துண்டாக கிழித்துதான் சாப்பிட முடியும்.

அல்லது சிறிய மீன்களைதான் சாப்பிட முடியும். ஆனால் கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை சிறிய மீன்கள் சாப்பிடுவதும், அந்த மீன்களை திமிங்கலங்கள் சாப்பிடுவதன் மூலம் அதன் ஆயுளுக்கு முடிவுரை எழுதப்படுகிறது. இப்படி தொடர்ந்து கடல்வாழ் உயிர்கள் பாதிப்புக்கு உள்ளாவது, அதை சார்ந்து இருக்கும் சூழலையும், மனிதர்களையும் கூட விரைவில் பாதிக்கும் என்று ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர். இதற்கு நடுவில்தான் திருவொற்றியூர் கடற்கரையில் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமையும், ராமேஸ்வரம் கடல் கரையில் திமிங்கலம் ஒன்றும் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் நிர்கதியான 75 இந்தியர்கள் மீட்பு



சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் படை ஆட்சியை கைப்பற்றியுள்ளதால் அங்கு பதற்றமான சூழலே தற்போது நிலவி வருகிறது. இதனால் வேலை உள்ளிட்ட காரணத்திற்காக தங்கியிருந்த இந்தியர்கள் 75 பேர் இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் மீட்கப்பட்டனர்.

சிரியாவில் தங்கியிருந்த இந்தியர்கள் 75 பேர் தூதரகங்கள் உதவியுடன் மீட்கப்பட்டு லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு அழைத்து வரப்பட்டனர். விரைவில் இவர்கள் அனைவரும் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட உள்ளனர். மீட்கப்பட்ட இந்தியர்கள் 75 பேரில் 44 பேர் ஜம்மு காஷ்மீரை சேர்ந்தவர்கள்.

“வெளிநாட்டில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசு முன்னுரிமை அளிக்கிறது. அமைதியின்மையை உன்னிப்பாக கண்காணிப்போம்” என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சிரியாவில் தங்கியிருக்கும் இந்தியர்கள் இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தி உள்ளது.

அவசர உதவி எண் 963 993385973 அல்லது hoc.damascus@mea.gov.in என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளலாம் என மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




புதிய சூரிய குடும்பம்:

## இந்திய வானிலை ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு



3 நட்சத்திரங்களை கொண்ட புதிய சூரிய குடும்பம் பூமியிலிருந்து குறிப்பிட்ட தொலைவில் இருப்பதாக இந்திய வானிலை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த புதிய கண்டுபிடிப்பு குறித்த விரிவான தகவல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

விண்வெளி குறித்து ஏராளமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்திய விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள இந்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சோலர் சிஸ்டம் எனப்படும் சூரிய குடும்பத்தில் பூமி அமைந்துள்ளது. இதில் பூமியை தவிர்த்து மற்ற எந்த கிரகத்திலும் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் கிடையாது. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய பின்வரும் வரிசையில் கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ முடியுமா என ஏராளமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டில்லியின் வெப்பநிலை 4.9 டிகிரி



இந்திய வானிலை ஆய்வு நிலையத்தின் தகவலின்படி (IMD), புது டில்லியில் புதன்கிழமை (11) குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இந்த குளிர்கால பருவத்தில் தேசிய தலைநகரில் முந்தைய நாளின் வெப்ப நிலையான 8 டிகிரி செல்சியஸுடன் ஒப்பிடும்போது, புதன்கிழமை வெப்ப நிலை 4.9 டிகிரி செல்சியஸாகப் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே குறைந்தபட்ச வெப்பநிலை 4. 9 டிகிரி செல்சியஸ் கடந்த ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதியும் பதிவாகியிருந்ததாக இந்திய வானிலை ஆய்வு நிலையம் சுட்டிக்காட்டியது. டில்லியின் சில பகுதிகளை பனிமூட்டம் மூடியதால், காலை 9.00 மணி வரை குளிர் நிலவியது.

IMD இன் தகவலின்படி, புகை மூட்டம் மற்றும் மூடுபனி நிலைகள், வடமேற்கில் இருந்து 8-10 கிலோ மீற்றர் வேகத்தில் மேற்பரப்பு காற்றுடன் இணைந்து வீசியது வெப்பநிலை வீழ்ச்சிக்கு பங்களித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. டெல்லியின் மிகக் குறைந்த அளவிலான வெப்ப நிலையானது கடந்த 1930 டிசம்பர் 27 ஆம் திகதியும் பதிவாகியிருந்தது. இதற்கிடையில், புதன்கிழமை காலை டெல்லியில் காற்றின் தரம் மோசமான நிலைக்கு சென்றது.

மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) தகவலின்படி, காலை 7 மணி நிலவரப்படி, டெல்லியின் காற்றுத் தரக் குறியீடு (AQI) 209 ஆக இருந்தது. ஒரு நாள் முன்னதாக காற்றுத் தரக் குறியீடானது தேசிய தலைநகரில் 223 ஆக பதிவு செய்யப்பட்டதுடன் இது தரமற்றதாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

# கடலில் மூழ்கி 4 மாணவிகள் மரணம்

கர்நாடகாவில் பாடசாலை சுற்றுலா சென்ற போது கடலில் குளித்த 4 மாணவிகள் உயிரிழந்துள்ளனர்.

கோலார் மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் 54 மாணவிகள் கல்விச் சுற்றுலா சென்றனர். அதன் ஒரு பகுதியாக அவர்கள் முருடேஸ்வர் கோயில் கடற்கரைக்கு பொழுதை கழிக்க சென்றனர். அவர்களில் 7 மாணவிகள் ஒன்றாக கடற்கரையில் இறங்கி குளித்தனர். எதிர்பாராத விதமாக கடல் அலையில்



அவர்கள் இழுத்துச் செல்லப்பட்டனர். அபயக்குரல் எழுப்பிய மாணவிகளை கண்ட ஆசிரியர்கள் கடலில் குதித்து காப்பாற்ற முயன்றனர்.

நீண்ட நேர போராட்டத்தின் பின் 7 மாணவிகளில் 3 பேரை மட்டுமே அவர்களால் காப்பாற்ற முடிந்தது. 4 மாணவிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். காப்பாற்றப்பட்ட மாணவிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தகவல் அறிந்த மாவட்ட வருவாய் அதிகாரிகள் உள்ளிட்டோர் மருத்துவனைக்கு சென்று நிலைமையை கேட்டறிந்தனர். வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிஜப்பூரில் துண்டுவெடிப்பு

# ஒருவர் சுட்டுக் கொலை, இருவர் காயம்

இந்தியாவிலுள்ள சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் நேற்று(11) பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச்சூடு சம்பவத்தில்



ஒரு நக்சல் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிஜாப்பூர் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சண்டையை தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

"அப்பகுதியில் அமுத்தம் மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் கருவி (IED) வெடித்ததில் இரண்டு மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் (DRG) காயமடைந்தனர் மற்றும் துப்பாக்கிச்சூட்டில் ஒரு நக்சல் கொல்லப்பட்டார். தேடுதல் பணி நடந்து வருகிறது" என பொலிஸ் அதிகாரி ஜிதேந்திர யாதவ் தெரிவித்தார்.

# 'கடவுளே அஜித்' என அழைக்காதீர்கள்

பொது இடங்களில் அஜித் இரசிகர்கள் கடவுளே அஜித் என்று சொல்லி அண்மை காலமாக டிரெண்ட் செய்து வந்த நிலையில் இதுபோன்ற கோஷங்கள் எனக்கு கவலை அளிப்பதாக நடிகர் அஜித் தெரிவித்துள்ளார்.

நடிகர் அஜித் விடாமுயற்சி மற்றும் குட் பேட் அக்லி என படங்களில் பிசியாக நடித்து வருகிறார். சூட்டிங்கில் ஒரு பக்கம் பிசியாக இருந்தாலும் அவர் விரும்பும் கார் ரேஸிங்கிலும் அவர் தொடர்ந்து பங்கேற்று வருகிறார். கார் ரேசிற்கான புகைப்படங்களும் இணையத்தில் வெளியாகி வைரலானது.

சமூக வலைதளங்களில் சமீப நாட்களாக மிகவும் டிரெண்டாகி வரும் வீடியோ என்றால் அது கடவுளே அஜித் என்பதாக தான் இருக்க முடியும். தியேட்டர் பொது இடங்கள் என ஆரம்பித்த இந்த கோஷம் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்ற நிகழ்ச்சி வரை ஒலித்தது. இன்ஸ்டாவிலும் இந்த வீடியோவை வைத்து பல ரீல்ஸ்களுக்கு லைக் குவிந்து வருகிறது.

இது தொடர்பாக அஜித் வெளியிட்டுள்ள கடிதத்தில் சமீபமாக முக்கியமான நிகழ்வுகளில் பொதுவெளியில் அநாகரீமாக தேவையில்லாமல் எழுப்பப்படும் “க.அஜித்தே” என்ற கோஷம் என்னை கவலையடையச் செய்திருக்கிறது. எனது பெயரைத் தவிர்த்து என் பெயருடன் வேறு எந்த முன்னொட்டும் சேர்த்து



அழைக்கப்படுவதில் நான் துளியும் உடன்படவில்லை. எனது பெயரில் மட்டுமே நான் அழைக்கப்பட வேண்டும் என விரும்புகிறேன்.

எனவே பொது இடங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் இந்த செயலை நிறுத்துவதற்கு உங்கள் ஒத்துழைப்பை நான் அன்புடன் வேண்டுகிறேன். என்னுடைய இந்த கோரிக்கைக்கு உடனடியாக மதிப்பு கொடுப்பீர்கள் என நம்புகிறேன்.

யாரையும் புண்படுத்தாமல் கடினமாக உழைத்து உங்கள் குடும்பத்தை கவனித்துக் கொள்ளுங்கள் மற்றும் சட்டத்தை மதிக்கும் குடிமக்களாக இருங்கள். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அழகான வாழ்க்கை அமைய வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

# சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல்



ஜனாதிபதி பஷர் அல்-ஆஸாத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த இரு நாட்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவ சொத்துக்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடாத்தியுள்ளது.

இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்தன, அவை 120 மைல்கள் வரை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் திங்கட்கிழமை ஒரு அறிக்கையில், லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இந்த தாக்குதல்களை நடத்தியதாக கூறனர்.

ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைத்தால், அவற்றை இஸ்ரேலுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என்ற காரணத்தினால், அவை கிளர்ச்சியாளர்களின் கைகளில் கிடைப்பதை தடுக்கும் நோக்கில் இந்த தாக்குதல் அரங்கேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லதாகியா துறைமுகத்தில் குண்டுவெடிப்புகளைக் காட்டும் வீடியோக்களை பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது. படக்காட்சிகள் கப்பல்கள் மற்றும் துறைமுகத்தின் சில பகுதிகளுக்கு விரிவான சேதத்தை எற்படுத்துவதை வெளிக்காட்டுகின்றன.

சிரியா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்றுகளுக்கு இடையே உள்ள இராணுவமற்ற பாதுகாப்பு மண்டலத்திற்கு தரைப்படைகளை நகர்த்தும்போது, சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் 350 இற்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடாத்தியதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை கூறியுள்ளது.

முன்னதாக, சிரிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் ஞாயிற்றுக்கிழமை(08) தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை 310 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடாத்தியுள்ளதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு (SOHR) தெரிவித்தது.

இதனிடையே, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஒரு அறிக்கையில், "இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோபாய திறன்களை அழிப்பதே" இஸ்ரேலிய படையினரின் நோக்கம். சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை "பெரும் வெற்றி" பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால்மைராவில் உள்ள விமானநிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட - பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலியய பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது. தாக்குதல்கள் ஆயுதக் கிடங்குகள், வெடிமருந்துக் கிடங்குகள் மற்றும் கடல் ஏவுகணைகளையும் குறிவைத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

### தடுப்புக் காவலில்

# தற்கொலைக்கு முயன்ற தென்கொரிய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்!



இராணுவச் சட்ட முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட தென் கொரிய முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கிம் யோங்-ஹியூன் (Kim Yong-Hyun) நேற்று புதன்கிழமை தற்கொலைக்கு முயன்றார்.

அதன்படி, தென் கொரியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் தடுப்புக் காவலில் தற்கொலை செய்து கொள்ள தனது உள்ளாடைகளை பயன்படுத்தினார் எனஅதிகாரிகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி யூன் சுக் யோல் இராணுவச் சட்டத்தை அமுல்படுத்திய பின்னர், தேசத்துரோக குற்றச்சாட்டை விசாரித்து வந்த தென் கொரிய வழக்கறிஞர்கள், முன்னாள் பாதுகாப்பு அமைச்சரை அண்மையில் கைது செய்தனர்.

தனது பதவியை இராஜினாமா செய்த கிம் யோங்-ஹியூன், தற்காலிக இராணுவ சட்டத்தை அமுல்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார் என குற்றம்சாட்டப்படுகிறது.

கடந்த வாரம் நாடு தழுவிய கொந்தளிப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி யூன் சுக் யோலின் குறுகிய கால இராணுவச் சட்டப் பிரகடனத்தைத் தொடர்ந்து தென் கொரியாவில் உள்ள சிறப்புப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதி அலுவலகத்தில் சோதனை நடாத்தியது.

சிறப்பு புலனாய்வுக் குழு ஜனாதிபதி அலுவலகம், தேசிய பொலிஸ் முகவர் நிலையம், சியோல் பெருநகர பொலிஸ் முகவர் நிலையம், மற்றும் தேசிய சட்டமன்ற பாதுகாப்பு சேவை என்பவற்றில் சோதனை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியா-ரஷ்யா நட்புறவு



அரசு முறை பயணமாக,ரஷ்யா சென்றுள்ள இந்தியாவின் பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அந்நாட்டு அதிபர் புடினை சந்தித்தார்.

அவர், இந்தியா-ரஷ்யா இராணுவ ஒத்துழைப்புக்கான குழுவின் மாநாட்டில் பங்கேற்றார். மாஸ்கோவில் அந்நாட்டு அதிபர் புடினை சந்தித்து உரையாடினார். இருநாட்டு தலைவர்களும் உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்தனர். "ரஷ்யா-இந்தியாவிற்கு இடையிலான உறவு மகத்தான ஆற்றலை கொண்டுள்ளது" என இருநாட்டு தலைவர்களும் தெரிவித்தனர்.

இந்தியா-ரஷ்யா நட்புறவு உலகின் மிக உயரமான மலையை விட உயர்ந்தது. உலகின் மிக ஆழமான கடலை விட ஆழமானது.

இந்தியா தனது ரஷ்யா நண்பர்களுக்கு எப்போதும் துணை நிற்கும். எதிர்காலத்திலும் அதை தொடருவோம் என ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.




# காஸாவில் அத்தியாவசிய உதவி தட்டுப்பாடு: 65,000 பேர் தவிப்பு

காஸாவின் வடக்கு பகுதியினுள் வெளியிலிருந்து வரும் மனிதாபிமான உதவிகள் அனைத்தும் இஸ்ரேல் இராணுவத்தினால் தடுக்கப்பட்டிருப்பதால் ஆயிரக்கணக்கான காசா மக்கள் அத்தியாவசிய உதவிகளின்றி தவிப்பதாக ஐக்கிய நாடுகளின் சபை தெரிவித்துள்ளது.

கடந்த அக்டோபர் 6 முதல் இஸ்ரேல் இராணுவம் வடக்கு காஸாவில் தரைவழித் தாக்குதல் நடத்தி அப்பகுதிகளைக் கைப்பற்றிவருகிறது. இதனால் அப்பகுதிகளுக்குள் செல்லும் மனிதாபிமான உதவிகள் அனைத்தும் இஸ்ரேல் இராணுவத்தால் தடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த 66 நாட்களாக இஸ்ரேல் கைபற்றிய காஸாவின் வடக்கு பகுதிகளான பெயிட் லஹியா, பெயிட் ஹனொன் மற்றும் ஜபாலியா ஆகிய இடங்களில்



வாழும் 65,000 முதல் 75,000 பலஸ்தீனர்கள் உணவு, நீர், மின்சாரம் மற்றும் மருத்துவம் ஆகிய அடிப்படை உதவிகளின்றி தவித்து வருவதாகவும், 5,500 இற்கும் மேற்பட்டோர் பெயிட் லஹியாவிலிருந்து வலுக்கட்டாயமாக இடமாற்றப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவரங்களின் கூட்டமைப்பான ஒசிஎச்ஏ தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு நிலவும் உணவுப் பற்றாக்குறையைப் பற்றி அந்த கூட்டமைப்பு கூறுகையில் மொத்தமாக காசா பகுதியில் ஐநாவைச் சார்ந்த வெறும் நான்கு உணவுக்கிடங்குகள் மட்டுமே தற்போது செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காஸாவில் பொதுமக்கள் உயிர்வாழும் சுழல் முற்றிலும் அழிவுகரமானதாக உள்ளது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. அது நிலைமையை இன்னும் மோசமானதாக ஆக்கியுள்ளது. இதனால், ஐநா உட்பட பல உதவி நிறுவனங்கள் காசா மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்க முடியாத சூழலில் உள்ளதாக, காசா நகரத்துக்கான ஐநாவின் மனிதாபிமான மற்றும் புனரமைப்பு ஒருங்கிணைப்பாளர் சிக்ரிட் காக் செவ்வாய்க்கிழமை (10) பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

ஏற்கனவே, இஸ்ரேலின் தாக்குதல்களினால் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் பலஸ்தீனர்களுக்கு, தற்போது உணவு குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான உதவிகளும் தடுக்கப்பட்டிருப்பது, அம்மக்களுக்கு இஸ்ரேலால் ஏற்பட்டுவரும் துயரத்தை இன்னமும் அதிகரித்துள்ளது.

# உலகிலேயே விலை உயர்ந்த பேனா

பேனாக்கள் எண்ணற்ற வடிவங்கள் மற்றும் நிறங்களில் கிடைக்கின்றன. இந்நிலையில் உலகிலேயே விலை உயர்ந்த பேனா ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகியது.

பேனாக்கள் நம் அன்றாட வாழ்க்கையில் அனைவரும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளாகும். பேனாக்களில் பல வகைகள் உள்ளன. பால் பாயிண்ட் பேனா (பைரோ பேனா), ஜெல் பேனா, ஃபவுண்டன் பேனா, பிரஷ் பேனா மற்றும் மார்க்கர் பேனா ஆகியவை மிகவும் பொதுவானவை. பேனாக்கள் எழுதுவதற்கு மட்டுமன்றி பரிசுப் பொருளாகவும், ஞாபகமாகவும் வழங்கப்படுகின்றன. இத்தகைய பேனாக்கள் எண்ணற்ற வடிவங்கள் மற்றும் நிறங்களில் கிடைக்கின்றன. இந்நிலையில் உலகிலேயே விலை உயர்ந்த பேனா ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகியது.

டிபால்டியின் ஃபுல்கோர் நாக்டர்னஸ் ஏலத்தில் உலகின் விலை உயர்ந்த பேனா ஏலம் விடப்பட்டுள்ளது. இத்தாலிய பிராண்டான டிபால்டியால் உருவாக்கப்பட்ட இந்த பேனாவின் வடிவமைப்பு கோல்டன் ரேஷியோவைப் பின்பற்றுகிறது. ஃபுல்கோர் நாக்டர்னஸ் இலத்தீன் மொழியிலிருந்து "நைட் க்ளோ" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சுமார் 8 மில்லியன் டொலரிற்கு விற்கப்பட்டுள்ள இந்த பேனா மிகவும் விலையுயர்ந்த பேனா பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது. அதன் இலத்தீன் மொழிபெயர்ப்பு வார்த்தையாக "நாக்டர்னஸ் ஃபுல்கோர்" அடையாளப்படுத்தப்படுகிறது. அதாவது இதன் பொருள் இரவு ஒளிர்வு என்பதாகும். உண்மையில் இது 123 மாணிக்கங்கள், 945 கருப்பு வைரங்கள் மற்றும் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட மிகவும் கண்கவர் பேனா ஆகும்.



இந்த அற்புதமான பேனாவின் வடிவம் மற்றும் கலை பொதுவாக தெய்வீக விகிதாச்சாரமாக அறியப்படும் ஃபிரேஷியோவைக் கடைப்பிடிக்கிறது. ஃபுல்கோர் நாக்டர்னஸின் ஆனது ஏராளமான கருப்பு வைரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் தலைப்பகுதியில் இரத்த-சிவப்பு மாணிக்கங்கள் பொறிக்கப்பட்டு கூடுதல் அழகு சேர்க்கப்பட்டுள்ளது. திபால்டியின் ஃபுல்கோர் நாக்டர்னஸின் கலவை மிகவும் அற்புதமானது. இந்த பேனாவில் ஏராளமான இரத்தினக் கற்கள் உள்ளன. மேலும் நீண்ட ஆயுளுக்காக திடமான 18 கரட் தங்கக் கட்டிகளை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பேனாவின் தனித்துவமானது என்னவென்றால் அது தெய்வீக ஃபை விகிதம் கடைபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த பேனாவை மூடும்போது அவை 1.618 என்ற ஃபை விகிதத்துடன் சரியாக இணைகின்றன. இந்த பேனா மிகவும் அரிதானது. 2020ஆம் ஆண்டில் ஃபுல்கோர் நாக்டர்னஸ் ஷாங்காயில் ஏலம் விடப்பட்ட இந்த பேனா சுமார் 8 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்பட்டது. உலகத்தில் இதுவரை விற்பனை செய்யப்பட்ட பேனாக்களிலேயே இந்த பேனாதான் விலை அதிகமானதாகும். இதற்கு முக்கிய காரணம் இதிலுள்ள விலை மதிப்பற்ற நவரத்தினங்கள் மட்டுமின்றி இதிலுள்ள கலைப் படைப்புக்களும் ஆகும். ஆடம்பர பேனா உற்பத்தியாளரான மாண்ட்ப்ளாங்க் போஹேம் ராயல் நிறுவனத்தால் 18 கரட் வெள்ளை தங்கத்தால் செய்யப்பட்ட பேனா இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்த பேனா சுமார் 1400 இற்கும் மேற்பட்ட வைரங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை முறியடித்த அமெரிக்க படை



ஏடன் வளைகுடாவில் வணிகக் கப்பல்களை குறிவைத்து ஏமனின் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை-ட்ரோன் தாக்குதலை இரண்டு அமெரிக்க கடற்படை கப்பல்கள் வெற்றிகரமாக முறியடித்துள்ளன. இதனால், வணிகக் கப்பல்களுக்கோ அதில் பயணித்த பணியாளர்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அமெரிக்க மத்திய கட்டளை(CENTCOM) செவ்வாய்க்கிழமை(10) தெரிவித்துள்ளது. அமெரிக்க இராணுவத்தின் கூற்றுப்படி, டிசம்பர் 9-10 ஆம் திகதிகளில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் ஆகாய தாக்குதல்களை USS Stockdale (DDG 106) மற்றும் USS O'Kane (DDG 77) என்ற அமெரிக்க நாசகாரக் கப்பல்கள் முறிடித்ததுடன் செங்கடல் வழியாக கப்பல் போக்குவரத்தை நிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Sports விளையாட்டு

# தென்னாபிரிக்க லீக்கில் நான்கு இலங்கை வீரர்கள்




தென்னாபிரிக்காவில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள SA 20 லீக் தொடரில் விளையாடும் வாய்ப்பை இலங்கை அணியின் இளம் பந்துவீச்சு மற்றும் சகலதுறை வீரர் துனித் வெல்லாலகே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதன்படி, அவர் SA20 தொடரின் மூன்றாம் கட்டத்தில் பர்ள் றோயல்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

லீக்கில் நான்கு இலங்கை வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மதீஷ பத்திரன மற்றும் மகேஷ் தீக் ஷன ஆகியோர் ஜோபர்க் சுப்பர் கிங்ஸ் அணியிலும், நுவன் துஷார MI கேப்டவுன் அணியிலும் விளையாடவுள்ளனர்.

இந்த நிலையில், பர்ள் றோயல்ஸ் அணியில் இங்கிலாந்து அணியின் ஜேக்கப் பெத்தேலும் உள்ளடக்கப்பட்டுள்ளார்.

எனினும், SA20 லீக் தொடர் நடைபெறுகின்ற காலப்பகுதியில் இந்தியாவிற்கு எதிராக நடைபெறவுள்ள T20 தொடருக்கு இங்கிலாந்து அணிக்காக அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் அவர் SA20 லீக் போட்டியில் விளையாட மாட்டார் எனவும் கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற கரீபியன் பிரீமியர் லீக்கில் பார்படோஸ் றோயல்ஸ் அணிக்காக துனித் வெல்லாலகே விளையாடியுள்ளார்.

SA20 லீக் தொடரின் 3ஆவது தொடர் ஜனவரி 9ஆம் திகதி முதல் பெப்ரவரி 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



# தென்னாபிரிக்க துடுப்பாட்ட பயிற்சியாளர் ஜே.பி.டுமினி விலகல்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வெள்ளைப்பந்து துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளரான ஜே.பி. டுமினி அப் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 T20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி அளிக்கும் விதமாக அந்த அணியின் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டின் (ஒருநாள்- T20) துடுப்பாட்ட பயிற்சியாளராக செயற்பட்டு வந்த முன்னாள் வீரர் ஜே.பி. டுமினி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தனது உத்தியோகபூர்வ வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளதாவது,

தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உடனான பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து உடனடியாக விலகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல் இன்னிங்ஸை தவிர எமது வீரர்கள் சிறப்பாகவே செயற்பட்டனர்

## தலைவர் தனஞ்சய டி சில்வா






தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முதல் போட்டியின் முதல் இன்னிங்ஸை தவிர ஏனைய இன்னிங்ஸ்களில் தமது அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் ஏனைய வீரர்கள் சிறப்பாக விளையாடியதாக இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா நேற்று (11) கட்டுநாயக்க விமான நிலையத்தில் தெரிவித்துள்ளார்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட சர்வதேச டெஸ்ட் தொடரை முடித்து விட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், தென்னாபிரிக்காவில் இக்கட்டான சூழ்நிலையில் தமது அணி இந்தப் போட்டியில் விளையாடியதோடு சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளை நாம் மேலும் எதிர்பார்க்கலாம் என்றார்.

எதிர்வரும் நாட்களில் இலங்கையில் நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளை கொண்ட இலங்கை - அவுஸ்திரேலியா தொடரில் அதிக நம்பிக்கை வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச ஆசிய பளுதூக்கல் போட்டியில் யாழ். புசாந்தன் சாதனை




சர்வதேச ஆசிய பளுதூக்கல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணம் சாவகச்சேரியை சேர்ந்த புசாந்தன் 3ஆம் இடத்தை பெற்று சாதனைபடைத்துள்ளார். சர்வதேச ஆசிய பளுதூக்கல் போட்டி உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லங்கா டி10 சுப்பர் லீக் ஆரம்பம்

இலங்கை கிரிக்கெட் சபை முதல் முறையாக நடத்தும் லங்கா டி10 சுப்பர் லீக் கிரிக்கெட் தொடர் நேற்று கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது.

ஆறு அணிகள் பங்கேற்கும் இத் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி வரை 9 நாட்கள் நடைபெறவுள்ளது.

போட்டியில் கொழும்பு ஜாகுவர்ஸ், கோல் மார்வல்ஸ், ஹம்பாந்தோட்டை பங்களா டைகர்ஸ், ஜப்னா டைட்டன்ஸ், கண்டி போல்ட்ஸ் மற்றும் நுவரெலியா கிங்ஸ் ஆகியே ஆறு அணிகள் மோதுகின்றன. நேற்று பிற்பகல் 2.45 மணிக்கு தொடரின் ஆரம்ப விழா கோலாகலமாக நடைபெற்றது.

தொடரில் 21 லீக் போட்டிகளும், ப்ளேஒவ் சுற்றில் 3 போட்டிகள் மற்றும் இறுதிப்போட்டி என மொத்தமாக 25 போட்டிகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 17ஆம் திகதி வரை லீக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதனை அடுத்து 18ஆம் திகதி ப்ளேஒவ் சுற்று போட்டிகள் நடைபெறவுள்ளன.

இறுதியாக 19ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இறுதிப்போட்டி நடைபெறவுள்ளது.

LANKA T10 SUPER LEAGUE

| Group A | Group B |
|---|---|
| JAFFNA TITANS | COLOMBO JAGUARS |
| HAMBANTOTA BANGLA TIGERS | KANDY BOLTS |
| NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |

MATCH SCHEDULE

| DATE | TIME - LOCAL | MATCH NUMBER | HOME TEAM | AWAY TEAM |
|---|---|---|---|---|
| 11 DECEMBER 2024 | 1445 | OPENING CEREMONY | | |
| | 1600 | MATCH 1 | JAFFNA TITANS | HAMBANTOTA BANGLA TIGERS |
| | 1815 | MATCH 2 | NUWARA ELIYA KINGS | COLOMBO JAGUARS |
| | 2030 | MATCH 3 | KANDY BOLTS | GALLE MARVELS |
| 12 DECEMBER 2024 | 1600 | MATCH 4 | KANDY BOLTS | NUWARA ELIYA KINGS |
| | 1815 | MATCH 5 | GALLE MARVELS | HAMBANTOTA BANGLA TIGERS |
| | 2030 | MATCH 6 | JAFFNA TITANS | COLOMBO JAGUARS |
| 13 DECEMBER 2024 | 1600 | MATCH 7 | NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |
| | 1815 | MATCH 8 | KANDY BOLTS | JAFFNA TITANS |
| | 2030 | MATCH 9 | COLOMBO JAGUARS | HAMBANTOTA BANGLA TIGERS |
| 14 DECEMBER 2024 | 1600 | MATCH 10 | COLOMBO JAGUARS | KANDY BOLTS |
| | 1815 | MATCH 11 | GALLE MARVELS | JAFFNA TITANS |
| | 2030 | MATCH 12 | HAMBANTOTA BANGLA TIGERS | NUWARA ELIYA KINGS |
| 15 DECEMBER 2024 | 1600 | MATCH 13 | HAMBANTOTA BANGLA TIGERS | KANDY BOLTS |
| | 1815 | MATCH 14 | COLOMBO JAGUARS | GALLE MARVELS |
| | 2030 | MATCH 15 | JAFFNA TITANS | NUWARA ELIYA KINGS |
| 16 DECEMBER 2024 | 1600 | MATCH 16 | NUWARA ELIYA KINGS | GALLE MARVELS |
| | 1815 | MATCH 17 | HAMBANTOTA BANGLA TIGERS | COLOMBO JAGUARS |
| | 2030 | MATCH 18 | JAFFNA TITANS | KANDY BOLTS |
| 17 DECEMBER 2024 | 1600 | MATCH 19 | COLOMBO JAGUARS | JAFFNA TITANS |
| | 1815 | MATCH 20 | KANDY BOLTS | NUWARA ELIYA KINGS |
| | 2030 | MATCH 21 | GALLE MARVELS | HAMBANTOTA BANGLA TIGERS |
| 18 DECEMBER 2024 | 1600 | QUALIFIER 1 | TEAM 1 | TEAM 2 |
| | 1815 | ELIMINATOR | TEAM 3 | TEAM 4 |
| | 2030 | QUALIFIER 2 | RUNNER UP OF QUALIFIER 1 | WINNER OF ELIMINATOR |
| 19 DECEMBER 2024 | 1730 | FINAL | WINNER OF QUALIFIER 1 | WINNER OF QUALIFIER 2 |
| | 1945 | CLOSING CEREMONY | | |

# பங்களாதேஷ் அணியின் T20 தலைவராக லிட்டன் டாஸ் நியமனம்




பங்களாதேஷ் அணியின் T20 தலைவராக லிட்டன் டாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

லிட்டன் டாஸ் பங்களாதேஷ் அணியின் தலைவராக ஒருசில போட்டிகளில் செயற்பட்டிருந்தாலும், முதன்முறையாக தொடர் முழுவதும் தலைவராக செயற்படவுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக நடைபெறவுள்ள T20 தொடருக்கான பங்களாதேஷ் குழாம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லிடன் டாஸின் தலைமையில் களமிறங்கும் பங்களாதேஷ் அணியில். டெஸ்ட் தொடரில் தலைவராக செயற்பட்ட மஹிதி ஹசன் மிராஷ், சௌமிய சர்க்கார், டஸ்கின் அஹ்மட் மற்றும் மஹிதி ஹாஸன் போன்ற முன்னணி வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், இளம் வீரர்கள் பலருடன் பங்களாதேஷ் அணி களமிறங்கவுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட T20 தொடர் 16 - 18 மற்றும் 20ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பங்களாதேஷ் அணி**

லிட்டன் குமார் தாஸ் (கெப்டன்), சௌமியா சர்க்கார், தன்சித் ஹசன் தமீம், பர்வேஸ் ஹுஸைன் இமன், அபிப் ஹுஸைன், மஹிதி ஹுசன் மிராஸ், ஜேக்கர் அலி அனிக், ஷமிம் ஹுஸைன் பட்வாரி, ஷேக் மஹேதி ஹசன், றிஷாத் ஹுஸைன், நசும் அகமது, தஸ்கின் அகமது, தஸ்கிம், ஹசன் மஹ்மூத், ரிப்பன் மொண்டோல்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 12ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.